

# திருக்கோயில்



ஏப்ரல்
2001

விலை
ரூபாய் ஐந்து





# திருக்கோயில்

திங்கள் இதழ்




| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2033 | விசு - சித்திரை | மணி |
|---|---|---|---|
| 43 | | ஏப்பிரல் 2001 | 4 |



சிறப்பாசிரியர்

*திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.*

ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

**திருவாரூர் அருள்மிகு கமலாம்பிகை
உடனுறை அருள்மிகு தியாகராஜசுவாமி**

## பொருளடக்கம்


திருவாரூர் திருத்தல மகிமை - தி. இராசமாணிக்கம், பி.ஏ., பிஎல்., இணை ஆணையாளர், தஞ்சை

ஸ்ரீ வீரபத்திரசுவாமி - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

இந்து மதம் நல்ல மதம் - க. ஜெயராமன், பிஎஸ்சி., பிஎட்.,

சைவ சமய விளக்கம் - தி.சு. கோவிந்தசாமி, மதுரை

சென்னை அருள்மிகு காளிகாம்பாள் - திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன்

மாணிக்கவாசகரின் புதுமைப்பெண் - டாக்டர் சிவப்பிரியா, புது டெல்லி

அருள் மழை பொழியும் அறுமுகச் செவ்வேள் - ஸ்ரீலஸ்ரீ கருமாரிதாசர்

ஐந்தெழுத்து மந்திரம் - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

கந்தர் அநுபூதி – திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

தட்சிணாமூர்த்தி திருவருட்பா – விரிவுரை - பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

சண்டேசுரநாயனார் - எம். சிவப்பிரகாசம்

சைவ வைணவ ஒற்றுமையும் சில அரிய குறிப்புகளும் - திருமதி இந்திரா ஆராமுதன்

எது சரியான விடை? - அ. நிறைமதி


**★★ அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகள் ★★**


உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி: *8279407*

# திருவாரூர் திருத்தல மகிமை

– தி. இராசமாணிக்கம், பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர், தஞ்சை.

திருவாரூர் திருத்தலப் பெருமையும், திருவாரூருக்குரிய ஆழித்தேர் பெருமையும் எண்ணஎண்ண நம் உள்ளம் மகிழவைக்கும் பெருஞ்சிறப்பினைக் கொண்டனவாகும். பஞ்சபூதத்தலங்களுள் நிலத்திற்குரிய திருத்தலம் திருவாரூர்த் திருத்தலமாகும். இத்தலத்தில் பிறப்பவர்கள் அனைவரும் சிவகணங்களே. ஆகவே அவர்கள் அனைவருக்கும் முத்தி உண்டு.

''திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார்
பெருக்கியசீர்த் திருவாரூர்ப் பிறந்தார்கள் ஆதலினால்
தருக்கிய ஐம்பொறி அடக்கி மற்றவர் தம் தாள் வணங்கி
ஒருக்கிய நெஞ் சுடையவர்க்கே அணித்தாகும் உயர்நெறியே''

எனும் சேக்கிழார் அருள்வாக்கால் திருவாரூர்ப் பிறந்தவர்கள் பிறவியாகிய ஆழி கடந்து இறைவன் திருவடி அடைவர் என்பது திண்ணமாகத் தெரிகிறது. அப்படியானால் திருவாரூரில் பிறக்காதவர்கள் பிறவி ஆழி கடக்க முடியாதா? ஏன் முடியாது? ஆழித்தேரோட்டம் கண்டால் அவர்களும் நிச்சயம் பிறவியாழி கடந்துவிடமுடியும். அதற்காகத்தான் தொன்று தொட்டு திருவாரூரில் ஆழித்தேர்த் திருவிழா நிகழ்த்தப்பட்டு வருகிறது.

மிகமிகத் தொன்மையான காலத்திலேயே திருவாரூர் திருத்தலம் தோன்றிச் சிறப்புபெற்றது என்பதை நம்சமயக்குரவர்கள் தெரிவித்துள்ளனர்.

''ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவம் ஆன நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
கண்ணழலால் காமனையும் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும்விண்ணும் தெரித்தநாளோ
மான்மறிக்கை ஏந்திஓர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே''

என்ற பாடல் தொடங்கி ஒரு பதிகம் முழுவதும் திருவாரூர்த் திருத்தலத்தின் பெருமையை வியந்து வினவியுள்ளார் திருநாவுக்கரசர்.

திருவாரூரைத் திருநாவுக்கரசர் போற்றிப் பாடியுளள 21 பதிகங்களும், திருஞானசம்பந்தர் போற்றிப் பாடியுள்ள 5 பதிகங்களும், சுந்தரமூர்த்தி நாயனார் பாடியுள்ள 8 பதிகங்களும் ஆக 34 பதிகங்கள் மட்டுமே இப்போது நமக்குக் கிடைக்கின்றன. இவையல்லாமல் திருவாரூர் அரநெறி ஆலயத்திற்கு அப்பர் பாடியுள்ள பதிகங்கள் இரண்டும், திருவாரூர்ப் பரவையுண் மண்டனிக்கு சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றும் கூட கிடைத்துள்ளன.

திருவாரூரைச் சுந்தரர் போற்றிப் பாடியுள்ள 8 பதிகங்களில் ஒரு பதிகமே ''திருத்தொண்டத் தொகை'' எனும் பெருமை மிகு பதிகம் ஆகும். சேக்கிழார் பெருமான் ''திருத்தொண்டர் புராணம்'' எனும் பெரியபுராணம் பாடசுந்தரர் திருவாரூரில் பாடிய திருத்தொண்டத் தொகையே மூலமுதற் காரணம் ஆனது என்பது ஈண்டு நினைந்து மகிழத்தக்கது.

திருவாரூரும், திருநள்ளாறு, திருநாகைக் காரோணம், திருக்காறாயில், திருக்குவளை என வழங்கும் திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக் காடு ஆகிய திருத்தலங்கள் சத்தவிடங்கத் தலங்கள் என அழைக்கப்படுகின்றன. தேவேந்திரன் தன் எதிரியான வலாசுரனை வெல்லும் பொருட்டு திருவாரூரை ஆண்ட முசுகுந்தனை அழைத்துச் சென்றான். முசுகுந்தனும் வலாசுரனை வென்றான். வலாசுரனை வென்றமைக்குப் பரிசாகத் தேவேந்திரன் திருமாலிடம் இருந்து பெற்று வணங்கிவந்த சோமாஸ்கந்த மூர்த்தியைத் தனக்குத் தருமாறு முசுகுந்தன் வேண்டினான். தேவேந்திரன் தன் உபாசனாமூர்த்தியைப் பிரிய மனமின்றி, தன் மூர்த்தியைப் போன்ற ஆறுமூர்த்திகளைச் செய்து அவ்வாறு சிலைகளில் எது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுமாறு முசுகுந்தனிடம் கூறினான். ''இதில் நான் கேட்டது இல்லை'' என்று முசுகுந்தன் மறுத்து விட வேறு வழியின்றி தேவேந்திரன் தன் உபாசனாமூர்த்தியை முசுகுந்தனுக்கு வழங்கி மற்ற மூர்த்திகளையும்கூட முசுகுந்தனுக்கே வழங்கிவிட்டான்.

முதலில் திருமாலாலும் பிறகு தேவேந்திரனாலும் வழிபடப்பட்ட சோமாஸ்கந்த மூர்த்தியைத்

திருவாரூரிலும் மற்ற ஆறுமூர்த்திகளை திருநாகைக் காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்குவளை, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய திருத்தலங்களிலும் முசுகுந்தன் பிரதிட்டை செய்து வழிபட்டான். அம்மூர்த்திகளே சத்தவிடங்க மூர்த்தங்களாகத் திகழ்கின்றன. விடங்கர் எனில் உளியினால் செதுக்கப்படாதவர் என்பது பொருளாகும்.

''சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயல் - நேரே
உற்ற திருவாய்மூர் உகந்த திருக்குவளை
சத்த விடங்கேசர் தலம்''

என்ற பாடல் சத்தவிடங்கத் தலங்களை தொகுத்துச் சுட்டுகிறது.

திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமான் தியாகவிடங்கர் ஆவார். தியாக விடங்கப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் பூங்கோயில் ஐந்துவேலி பரப்புக்கொண்டது. கோயில் ஐவேலி, திருக்குளம் ஐவேலி, செங்கழுநீர் ஓடை ஐவேலி என்று எல்லாமே மிகப் பெரியதாக விளங்கும் திருவாரூரில் தியாகப் பெருமான் வீதிவலம் வரும் ஆழித்தேரும் மிகப் பெரியதாகத் திகழ்கிறது. அலங்கரிக்கப்பட்ட திருத்தேரின் உயரம் 96 அடியாகவும், எடை 300 டன்களாகவும் அமைகிறது. உயரம், பருமன், கலை மலிந்த கட்டுமானம், அழகு பொலியும் அலங்காரம், தியாகர் அசைந்தாடி வரும் மிடுக்கு ஆகிய காரணங்களால் ''திருவாரூர் தேர் அழகு'' என்று யாவரும் ஆழித்தேரைப் போற்றியுரைக்கக் காண்கிறோம்.

இத்தகைய ஆழிப் பெருந்தேரில் தியாகேசர் வீதிவலம் வரும் வைபவத்தைத் தொன்மைக்காலம் தொட்டே நம் தமிழ்ப்பெருஞ்சான்றோர்கள் கொண்டாடி வந்துள்ளனர்.

''ஊழித் தீயன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான்கண்டது ஆரூரே''

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். சேக்கிழார் பெருமானும்

''திருவாரூர் ஆழித்தேர் வித்தகர் கோயில்''

எனப் போற்றியிருக்கிறார்.

பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் ''திருநகரச்சிறப்பு'' எனும் தலைப்பிட்டு 50 பாடல்களில் திருவாரூரின் சிறப்பையே பாடியுள்ளார். மேலும் சுந்தரர் பெருமானின் வரலாற்றை விவரிக்கும் தடுத்தாட்கொண்ட புராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், கழறிற்றறிவார் புராணம், வெள்ளானைச் சருக்கங்களிலும் திருவாரூரைப் புகழ்கிறார். திருவாரூடன் தொடர்பு கொண்ட திருவாரூர்ப் பிறந்தார் புராணம் மற்றும் கழற்சிங்கநாயனார், செருத்துணை நாயனார், சோமாசி மாறர், திருநீலகண்டயாழ்ப்பாணர், தண்டியடிகள், நமிநந்தியடிகள், விறல்மிண்ட நாயனார் ஆகியோர் வரலாறுகளை விவரிக்கும் பகுதிகளிலும் திருவாரூரை மிகப் போற்றியுள்ளார்.

''பூதநாயகர் புற்றிடம்கொண்டவர் ஆதிதேவர் அமர்ந்த பூங்கோயில்'' என்று ஆலயத்தையும் ''ஆயிரம் பாற்கடல் போன்றது'' என்று அவ்வாலயத்துள் அமைந்த தேவாசிரிய மண்டபத்தையும் சேக்கிழார் போற்றுகிறார்.

நிலமகள் தன் அழகிய நெற்றியில் அணிந்துள்ள திலகம் போன்றது எனவும், திருமகள் அமர்ந்திருக்கும் செந்தாமரை போன்றது எனவும் திருவாரூரைப் போற்றுகிறார் சேக்கிழார்.

''நிலமகட்கு அழகார் திருநீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்மகட்கு வண்தாமரைபோல் மலர்ந்தது
அலகில் சீர்த்திருவாரூர் விளங்குமால்''

என்பது பாடல்.


திருவாரூர் வீதிகளிலும் வீடுகளிலும் திருப்பதிக முழக்கங்கள் ஒலித்துக்கொண்டே இருக்கும் என்பதையும்

''உள்ளம்ஆர் உருகாதவர் ஊர்விட
வள்ளலார் திருவாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதிகங்கள் பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்''

என வர்ணித்துள்ளார் சேக்கிழார்.

திருமால் வராகமாகவும், பிரமன் அன்னமாகவும் வடிவுகொண்டு அடியும் முடியும் தேட அவர்களுக்கெல்லாம் அகப்படாத இறைவர் சுந்தரருக்காகப் பரவையாரிடம் தூதுசென்ற சிறப்பினைப் போற்றி அத்தகைய கருணாநிதியான கடவுளின் திருவடிகள் மணக்கும் ஊர் திருவாரூர் என்பதைச் சேக்கிழார் பெருமான்

''படர்ந்த பேரொளிப் பன்மணிவீதிபார்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்ட வன்தொண்டர்க்குத்
தூதுபோய்
நடந்தசெந் தாமரையடி நாறுமால்''



திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் பங்குனிப் பெருவிழா திருக்கல்யாணக் கொடியேற்றம் சிறப்புற நடைபெற்றது. உதவி ஆணையாளர் / செயல் அலுவலர் சு. பாலசுப்பிரமணியன் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

எனப்பாடியிருக்கும் சிறப்பையும் நாம் பன்முறை படித்து மகிழலாம்.

இவ்வாறு திருவாரூரின் சிறப்புகளை மிக விரிவு பட பாடி ஆழித்தேரோட்டச் சிறப்பையும் நமக்கு உணர்த்துவாராய் ''தேராரும் நெடுவீதித் திருவாரூர்'' ''திருவாரூர் ஆழித்தேர்வித்தகர் கோயில்'' எனச் சேக்கிழார் போற்றுவார். ஆழித்தேர்த்திருவிழா நீண்ட நெடுங்காலமாகவே திருவாரூரில் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்திருக்கிறது. திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் முறையே பந்தக்கால் நட்டும் கொடியேற்றிவைத்தும் ஆழித்தேர் விழாவை முன்னின்று மிகச் சிறப்பாக நடத்தியுள்ளார்கள். ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று பாடிய சுந்தரமூர்த்தி நாயனாரின் தாயார் இசைஞானியார் தோன்றிய தலமும் திருவாரூரே. மேலும் சுந்தரரும் பரவை நாச்சியாரை மணந்து இத்திருவாரூரிலே வாழ்ந்து ஆழித்தேரோட்ட வைபவம் உள்ளிட்ட அனைத்துத் திருவிழாக்களையும் கண்டு மகிழ்ந்துள்ளார்.

இவ்வாறு தேவாரம் பாடிய மூவராலும் போற்றப்பட்ட திருவாரூர் ஆழித்தேரோட்டத்தை பண்டைக்காலத்திலிருந்து சோழர், பாண்டியர், பல்லவர், விஜயநகரப் பேரரசர், நாயக்கமன்னர் மற்றும் மராத்திய மன்னர்கள் உள்ளிட்ட அனைவரும் மிகச் சிறப்பாக நிகழ்த்திப் பெருமை கண்டிருப்பதைப் பல கல்வெட்டுகளும் ஆவணங்களும் நமக்குப் பறை சாற்றுகின்றன.

"ஆரூரன் சந்நிதிபோல் ஆரூரன் ஆலயம்போல்
ஆரூரன் பாதத்த ழகுபோல் - ஆரூர்
மருவெடுத்த கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே
ஒருஇடத்தில் உண்டோ உரை''

என்ற பாடல் திருவாரூர்த் திருத்தலப் பெருமையைத் தொகுத்துச் சுட்டுகின்றது.

தேவேந்திரனே வந்து சாயரட்சைப் பூசையின்போது பெருமானைப் பூசிக்கின்றதாக ஐதிகம் உள்ளபடியால் அர்ச்சகர் நீண்ட அங்கி, தலைப்பாகை அணிந்து இத்திருக்கோயிலில் சாயரட்சைப் பூசை செய்யும் சிறப்பினை இன்றும் கண்டு மகிழலாம்.

இத்தகைய திருவாரூர் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் சிறப்புற நிறைவேற்றப்பட்டு 9.4.2001 திருக்குட நீராட்டு விழா நடைபெறுவது நாம் பெற்ற பேறு ஆகும். அனைவரும் திருவாரூர் வருக! திருவருள் பெற்று இன்புறுக!

★★★

# ஸ்ரீ வீரபத்திர சுவாமி

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

பிரம்மாவின் புதல்வன் தக்ஷன். தக்ஷன் கடுந் தவம் புரிந்து, ஈஸ்வரனிடம் ஏகப்பட்ட வரங் களைப்பெற்றவன். 'அவன் பூலோகம், அந்தரிக்ஷம், சுவர்க்கம், பாதாளம், பிரம்மா, விஷ்ணு லோகங் கள் அனைத்திற்கும் அதிபதியாக இருக்கவேண்டும்; அந்தந்த உலகிலுள்ள அனைவரும் என் ஆணைக்கு உட்பட்டே நடந்து வரவேண்டும். பல புத்திரர்கள் மிகுந்த அறிவோடும், பலத்தோடும் பிறக்க வேண் டும். தனக்குப் பிறக்கப்போகும் கௌரியை மன முவந்து தங்களுக்கு அளிக்கிறேன்; அவளை திரு மணம் புரிந்துகொண்டு என்னைக் காத்தருள வேண்டும்' என்று பலவாறு சிவபெருமானை வேண்டி வரம்பெற்றவன்.

பரமேஸ்வரனும் அவனை நோக்கி, ''தக்ஷனே! நீ நியாயமாக நடந்துவரும் வரையில் நீ கேட்ட வரங்கள் எல்லாம் என்னுடைய மகிமையால் உனக்கு சித்திப்பதோடு, அவை மேன்மேலும் வளர்ந்துவரும்'', என்று கூறி விட்டு அங்கிருந்து மறைந்து விட்டார்.

தக்ஷனின் வேண்டுகோளுக்கிணங்கி, பிரம்மா அதி அற்புத அழகும், மகிமையும் நிறைந்த ஒரு நகரத்தை உண்டாக்கிக்கொடுத்தார்! அதற்கு 'தக்ஷ புரி' என்று பெயர்.

அந்த மாளிகைக்குச் சென்ற தக்ஷன் முன், அவனைச் சூழ்ந்து இந்திராதிதேவர்கள், பிரகஸ்பதி, சுக்கிராச்சாரியார், அசுரர்கள், சூரியன் முதலான நவ கிரகங்களும், திக்பாலகர்களும், லோகபாலர்களும், மற்றும் பல இனத்தவர்களும் வணங்கிய வண்ணம் நின்றுகொண்டிருந்தார்கள்.

தக்ஷன் தன் மனைவியான வேதவல்லியோடு பெரும்புகழோடு விளங்கினான். அவனுக்கு பல புதல்வர்கள், புதல்விகள் பிறந்தனர். தக்ஷனுக்கு பிறந்த 'சதி' என்பவள், தாக்ஷாயணி என்று அவன் பெயர் கொண்டே விளங்கினாள்.

பன்னிரண்டு வயதில் தவம் செய்யப்புறப் பட்டாள்!, கடும் தவம் புரிந்தாள். கிழவேடம் தரித்து வந்த ஈசன், தாக்ஷாயணியின் முன் தோன்றி னார்.

தோழிகள் மூலம், கிழவேதியரர் வந்த தைக் கேட்ட தக்ஷன், அவ்வேதியர் சிவபெருமான் தான் என்பதைப்புரிந்து கொண்டான். அப்பெருமா னுக்கும், தன் மகள் தாக்ஷாயிணிக்கும் திருமணம் செய்து முடித்துவிடுவதாகக்கூறி உடனே திருமண ஏற்பாடுகளை தடபுடலாகச் செய்யலானான். பலரும் வியக்கும் வண்ணம், மங்களகரமாகவும், ஆடம்பர மாகவும் ஒரு குறையும் இல்லாமல் செய்து முடித்து, தன்மனைவியுடன் மகளை அலங் கரித்து, சிவன் முன் நிறுத்தினான்.

இந்திராதி தேவர்கள், அஷ்டதிக்பாலகர்கள், பிரம்மாதி தேவர்கள், கணநாதர்கள், விஷ்ணு போன்ற வர்கள் தத்தம் மனைவியரோடு கூடியிருந்தனர். அனை வரும் நறுமலர்களைத் தூவி மகிழ்ந்தனர். அந்தணர் களின் மந்திர ஒலிகளோடு இனிமையான வாத்திய கருவிகளின் முழக்கம் பெருமளவில் எழும்பியது. அப்போது கின்னரர்கள் இன்னிசை கானம்பாட, நடனமாதர்களான 'ரம்பை திலோத்தமை ஆகியவர் கள் அற்புதமாக நடனமாடினார்கள். பிரம்மா விஷ்ணு முதலான சகல தேவர்களும் மகேஸ்வரனின் மலரடி களை வணங்கித்துதித்தார்கள். அச்சமயத்தில் மகேஸ் வரனின் திருவடித்தாமரைகளில் தக்ஷனின் மனைவி யான வேதவல்லி நீர்வார்க்க, அந்நீரினால் அப் பெருமானுக்கு விதிமுறைப்படி பூஜைகள் செய்து தன் பெண்ணை கன்னிகாதானம் செய்து கொடுத் தான். பிரம்மதேவன் அக்னிவளர்த்து ஹோமம் செய்ய, மகேஸ்வரன், கௌரி தேவியினுடைய தாமரைப்பூ போன்ற மிருதுவான கரத்தைப்பற்றினார். அப் போது மகாவிஷ்ணு போன்ற தேவர்கள் மங்கள மான வேதகோஷங்களை முழங்கினார்கள். அச்சமயத் தில் பரம்பொருளான சிவபெருமான் தன் மருகன் தானே என்ற ஆணவம் தக்ஷனுக்கு உண்டானது. அதனை உணர்ந்து தக்ஷனுக்கு அறிவுண்டாக்க எண்ணி மாப்பிள்ளை கோலத்தில் இருந்த பரம சிவன் சட்டென்று மறைந்து விட்டார். அதைக் கண்ட கௌரி தேவி, அளவு கடந்த துயரம் அடைந்து கதறி அழுதாள்; மீண்டும் தவச்சாலையை அடைந்து கடுமையான தவம் செய்வதில் முனைந்தாள்.

திருமணத்திற்கு வந்த பிரம்மாதி, இந்திராதி தேவர்களும், விஷ்ணு முத லானவர்களும், யக்ஷ, கின்னர, கணநாதர்களும் ஈசன் மறைந்ததில் செய்வ தறியாது திகைத்து நின்றனர். யாரால் தவறு நேர்ந் திருக்குமென்று பேசிக்கொண்டனர்.

அப்போது தக்ஷன் மனம் வருந்தியவனாகக் கல்யாண மண்டபத்திலிருந்த அத்தேவர்களை



நோக்கி, ''அமரர்களே! அந்த பரமசிவன் திடீரென்று மறைந்து போனதற்கு என் மீது ஏதாவது குற்றம் கண்டீர்களா? அந்தப்பரமசிவன் பாதி கல்யாணம் நடந்து கொண்டிருக்கும்போதே, அதைக் கெடுக்கும் விதமாக எங்கோ திடீரென்று மறைந்து போய்விட்டார். இவரை என் மாப்பிள்ளையாக இருக்கும்படி யார் கேட்டுக்கொண்டார்கள்? அஜகலத்தின் (யானை) எலும்பால் செய்யப்பட்ட வில்லை ஏந்தியவனும், தன் தாய்தந்தையரை அறியாதவனும், சுத்தமென்பதே இல்லாதவனுமாகிய அந்தப்பரமசிவன், என் மகளைத் தானாகவே விரும்பி மணந்துகொள்ள நினைத்து, அந்தணவடிவம் தரித்து வந்தான். என் மகளிடம் அந்த வஞ்சகன் பேசி என் மகளின் கையைப்பிடிக்க அவளிடம் தானாகவே வேண்டி நின்றான். அதனால் அக்கொடியவனை நானே இங்கு அழைத்து வந்து, தேவர்களாகிய உங்கள் முன்னிலையில், அவனுக்கு என் அருமைப் புத்திரியை முறைப்படி பாணிக்கிரஹணமும் செய்து கொடுத்தேன். ஆனால் மூர்க்கர்களுக்குத் தலைவனான அந்த சுடுகாட்டுக்கூத்தாடியோ, பாதி கல்யாணத்தில் திடீரென்று எங்கோ மறைந்துபோய், இந்தச் சபையில் பெருத்த அவமானத்தை விளைவித்து விட்டான். அவரவர் பிறவிச் சுபாவம் அவரை விட்டு அவ்வளவு சீக்கிரம் போய்விடுமா? அதனால் அந்த சிவன் கிழவேதியன் வேஷம் போட்டு இந்தக் கெட்ட பெயரை உண்டாக்கி விட் டான்'' என்று கூறினான். பிறகு தேவர்களை எல்லாம் அவரவர் இருப்பிடம் அனுப்பிவிட்டு, மகேஸ்வரனிடம் மட்டும் அளவு கடந்த கோபம்கொண்டவனாகக் காலத்தைக் கழித்து வந்தான்.

கடுமையான தவத்தை மேற்கொண்ட தாக்ஷாயிணி தேவியோ, இடைவிடாமல் நீண்ட காலம் சிறிதும் தவறில்லாமல் கடும் தவம் புரிந்து வரலானாள். பரமசிவனும் அவளுக்கு அருள் புரிந்து காட்சியளித்தார். அவளைக் கைத்தாங்கலாகத் தூக்கி, தமது ரிஷபவாகனத்தில் அமர்த்திக்கொணடு கயிலையங்கிரியை நோக்கிச் சென்றார். சகல தேவகணங்களும் அவருடன் சென்றார்கள்.

இந்நிகழ்ச்சியை அறிந்த தக்ஷன், ''தேவர்களை அழைத்து அவர்களை நோக்கி, ''ஆகா! முன்பு அவனாகவே பாதி கல்யாணத்தில் ஓடிப்போய் விட்டான்; இப்போது பெண்ணை திருட்டுத் தனமாய்க் கடத்திக்கொண்டும் போய்விட்டான். அவன் நம் கட்டளையை மீறியதும் அல்லாமல் நமக்குப் பெருத்த அவமானத்தையும் உண்டாக்கி விட்டான். தாய் தந்தையரின் அனுமதி இல்லாமல் எவன்தான் இப்படிப்பட்ட காரியத்தை செய்வான்? ஓ! தேவர்களே! அந்தப் பிச்சைக்காரன் இதற்கு முன்னால் எங்காவது கல்யாணம் செய்து கொண்டதும் இல்லை; கல்யாணம் செய்தோ கல்யாணத்தைப் பார்த்தோ இருந்தால், எந்தப்புத்திசாலிதான் இப்படிப்பட்ட செயலைச் செய்வான்?'' என்று இம்மாதிரியான அவதூறான வார்த்தைகளைப் பேசினான். பிறகு அத்தேவர்களை அவரவர் இருப்பிடத்திற்கு செல்லுமாறு அனுப்பிவிட்டு மகேஸ்வரனிடம் மிகவும் கோபங்கொண்டவனாக வாழ்ந்து வந்தான்.

பிரம்மாதி தேவர்கள், விஷ்ணு ஆகியோர் தக்ஷன் சிவனை நிந்தித்துப் பேசுவதும், அவனுடன் தாங்கள் இருக்கவேண்டிய நிர்ப்பந்தத்தையும் நினைத்து வருந்தலானார்கள்.

நீண்ட நாட்களுக்குப்பின் பிரம்மதேவன் ஒரு யாகம் செய்ய முற்பட்டு, ஈசனை அழைக்கச் சென்றதில், ஈசன் தன் பொருட்டு நந்தியை அனுப்புவதாகச் சொன்னார்.

யாகத்திற்கு வந்திருந்த முப்பத்து முக்கோடி தேவர்கள், யக்ஷ கின்னரர்கள், கணாதிபதிகள் வந் திருந்தனர். நந்திவரும்போது பிரம்மன் அவரை மிக வும் உபசரித்து இருக்கையில் அமர்த்தினார். இதைக் கண்ட தக்ஷன், தன் தந்தையிடம் நந்தியைப்பற்றி யும், ஈசனைப்பற்றியும் கண்டபடி பேசியதும் இல் லாமல், 'வேறொருவர் எனக்கெதிராக இப்படிச் செய்திருந்தால் இந்நேரம் அவர்கள் தலை பூமியில் விழ வெட்டிச் சாய்த்திருப்பேன்' என்றும் கண்மூடித் தனமாகப் பேசலானான். ஈசனை ஏசியதும் நந்தி பகவான் தன் இருகாதுகளையும் தம் இருகை களால் மூடிக் கொண்டார்.

மேலும் தக்ஷன் 'ஹவிர்பாகம் ருத்திரனைச் சேரக் கூடாது. எங்கெல்லாம் ருத்திரனைப் போற்றிப் புகழப்படுகின்றனவோ அவைகளையெல்லாம் என் கட்டளையின்படி நீக்கி விடவேண்டும்' என்று கோபா வேசத்துடன் பல வசை மொழிகளைக் கொட்டினான்.

தக்ஷனை நோக்கி, நந்திபகவான், ''அடே! மகா பாவி! மூடபுத்தியுள்ளவனே! எங்கள் தலை வரான பரமசிவனையா, நீ இவ்வாறு பழித்துப் பேசு கிறாய்? பிரம்ம தேவனின் யாகத்தில் ஹவிர்பாகம் முதலில் ஈசனை அடையாமல் யாகம் நடத்த முடி யுமா? அப்படிச் செய்பவர்களின் தலையை என் ஆணையில் வெட்டிக்கொன்று வீழ்த்தப்படும். இருந் தாலும், மகேஸ்வரரின் எண்ணம் எதுவோ என்று நான் உன்னை விட்டு விட்டுப் போகிறேன். என் ஆக்ஞையால் அதி விரைவிலேயே உன் ஐஸ்வர்யங் கள் அனைத்தும் அந்த சர்வேஸ்வரனுடைய விருப் பத்தினால அழிந்து போகக் கடவதாகுக! சிவனை நிந்தித்துப் பேசும் உன் தலையும் அறுந்து பூமியில் விழட்டும்; மேலும் அறுபட்ட அந்தத் தலையும் கேவலமான ஆட்டின் தலையாக மாறிவிடட் டும்!'', என்று சாபமிட்டு விட்டு, தம் பூதகணங்க ளோடு கைலாய மலையை அடைந்து, நடந்தவற்றை விவரமாக ஈசனிடம் கூறினார். அவருடைய கட்டளைப்படி நந்திதேவர் தம் இருப்பிடமாகிய மாளிகை வாயிலுக்கு வந்து காவல் புரியலானார்.

நந்திதேவர் கோபமாகக் கிளம்பியதைக் கண்ட தேவர்கள் அனைவரும் பயந்து நடுங்கினர். பிரம்மாவும் 'இந்த யாகத்தை செய்து முடிப்பதைக் காட்டிலும் சும்மா இருந்துவிடுவதே சரியாகும்' என்று எண்ணி யாகத்தைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு எதுவும் பேசாமல் இருந்துவிட்டார்.

அதன் பின் தக்ஷன், ''பரமேஸ்வரனைப் புறக்கணித்து விட்டுப்பல பெரிய யாகங்களைச் செய்ய முன் வாருங்கள்'', என்று கூறினான்.

பிறகு தேவதச்சனும் விசுவகர்மாவுமான மயனிடம் தனக்கு யாகம் செய்வதற்கான 'யாக சாலை' ஒன்றை, அனைத்து வசதிகளுடனும், காண மிக அழகாகவும் உருவாக்கிக் கொடுக்கச் சொன் னான். அதன்படி மயனும் அதி அற்புதமான யாகசாலை ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்தான். அதைக்கண்ட தக்ஷன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான்.

அதன்பின் யாகத்திற்கான பொருள்களை சேமித்து பிரம்மா, விஷ்ணு இந்திராதி தேவர்கள், முனிவர்கள் அனைவரையும் அழைத்து, உபசரித்து ஆசனங்கள் கொடுத்து அமர்த்தினான். இது போன்ற யாகசாலையைக் கண்டதில்லை என்று விண்ண வர் அதிசயித்தனர். அவர்களின் நடுவே தானும் அமர்ந்து கொண்டான்.

லக்ஷ்மி, சரஸ்வதி, இந்திராணி போன்ற தேவ பத்தினிகளும், ரிஷிபத்தினிகளும் அதி அற்புத மான அலங்காரங்களுடன் அழகுத் தோற்றத்தோடு, தக்ஷனின் மனைவி வேதவல்லியினால் வரவேற்று, உபசரிக்கப்பட்டு மனம் மகிழ்ந்திருந்தார்கள்.

அப்போது தக்ஷன் தூதுவர்களிடம் ''நாம் வர வேற்றவர்கள் அனைவரும் வந்துவிட்டார்களா?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள், ''அதிபதியே! சிறந்த தவச்சீலரான அகஸ்தியரும், மகானான நாரத முனிவரும், வேதவேதங்களில் வல்லுனரான சனகர் முதலான முனிவர்களும், ததீசி, அத்ரி, வசிஷ்டர், பராசரர், பிருகு, துர்வாசர் முதலான முனி சிரேஷ்டர் களும், தங்களையும் தாங்கள் செய்து நிறைவேற்றப் போகும் யாகத்தையும் பழித்து அவமதித்து இங்கே வராமல் இருந்துவிட்டார்கள்''. என்றார்கள்.

உடனே தக்ஷன் இடி இடியென சிரித்துக் கொண்டே, ''ஓஹோ! அவர்கள் அனைவரும் சிவ பக்தர்களாக இருப்பதனாலேயே இங்கே வர வில்லை போலும்'' நல்லது, அவர்கள் இங்கே வரவேண்டாம்'', என்று நிஷ்டூரமாகப் புறக்கணித் துக் கூறினான்.

அதே சமயம் ததீசி முனிவர் தம் சிஷ்யர்க ளுடன் அங்கே வந்தார். அவரை உபசரித்து இருக்கை யில் அமர்த்தினான் தக்ஷன். ததீசி முனிவர், ''தக்ஷனே! எக்காரணத்தை முன்னிட்டு எனக்கு இங்கு வரும் படி அழைப்பு விடுத்தாய்'' என்று கூறினார்.

தக்ஷனும், நடந்தவைகளை எல்லாம் விவாதித்து சிவன்மேல் தவறு என்றும், தன்மேல் தவறில்லை எனவும் கூறலானான்!

ததீசி முனிவரும், ''அந்தப் பரமசிவனை மதிக்காமல், அறியாமையால் நீ இந்த யாகத்தைச் செய்ய நினைக்கிறாய். பிரம்மாவிஷ்ணு முதலான

தேவர்களையும், ஜீவராசிகளையும் படைத்து, காத்து அவரே கடைசியில் அழிக்கவும் செய்கிறார். அனை வருக்கும், அனைத்திற்கும் தந்தையான சிவ சம்புவே பரம்பொருள் என பிரசித்திபெற்றிருக் கிறார். அந்த மகாதேவரே, 'ஹவிஸ்ஸு'களை அருந்துபவர், ஹவிஸ்ஸின் சொரூபம் அவரேயா வார். அக்னிக்கும் அவரே தந்தையுமாவார். யாகங் களுக்குக் கர்த்தாவும், அதைக்காப்பவரும் வேறு யாருமே இல்லை என்று உபநிஷத்துக்கள் எடுத் துரைக்கின்றன. அதனால் சாக்ஷாத் சிவபெருமா னையே இந்த யாகத்தில் பூசித்து வழிபட வேண்டும். அதுதான் உனக்குச் சகல நன்மைகளையும் பயக்க வல்லது. யாகங்களுக்கு நாயகரான ஸ்ரீபரமேஸ்வரரை நீ முதலில் வணங்கி பூஜை செய்து, ஹவிர் பாகத் தைக் கொடுத்து அவர் மனம் குளிரும்படியாகச் செய்க! அந்த சிவபெருமானே சகல உலகங்களின் வடிவினரான பரப்பிரம்மமாவார்,'' என்றும், பலவித மாய் சிவனால் நடத்தப்பட்ட பல கதைகளைச் சொல்லிக் கூறிவிட்டுத்தம் இருக்கையில் மௌனமாக அமர்ந்தார்.

அதன் பின் தக்ஷன் சிவபெருமானை பல வாறு அவதூறு வார்த்தைகளைப் பேசியதாலும், ததீசி முனிவரின் வார்த்தைகளைக் கேட்காததாலும், ததீசி முனிவருக்குக் கோபம் வந்தது, அங்கிருந்த தேவர்கள், முனிவர்கள் அனைவருக்கும் சாபமளித் தார். ''சிவனை நிந்தித்ததைக் கேட்டவரும், இந்த யாகத்தில் கலந்துகொண்டவர்களும், தலை துண் டாகி நரகங்களில் வசிக்கக் கடவீர். தக்ஷனுடன் அனைவரது தலையும் அறுபட்டு இந்த யாகம் நடக் காமல் போகும்'' என்று சாபமளித்து விட்டு, சிஷ்யர் களுடன் அங்கிருந்து சென்றுவிட்டார்.

இவ்விவரங்களை நாரத முனிவர், கைலாயம் சென்று பரமேஸ்வரனிடம் விவரித்தார். இதைக் கேட்ட பார்வதி, யாகத்திற்குச் செல்வதாகச் சொல்ல, பரமேஸ்வரன், 'அழைப்பு வராத இடத்திற்கு நாமே செல்லக்கூடாது' என்று கூறினார். பார்வதியோ, 'பிறந்த வீடு செல்ல அழைப்போ அவர்களது அனுமதியோ தேவையில்லை' எனக் கூறினாள். சிவனும், 'உன் தந்தை என்னை அவமதித்து அங்கு யாகம் செய்கிறான். என் மனைவியான உனக்கும் அதே நிலைதான். தக்ஷனின் பெண்ணாக வேண்டு மானால் சென்று அவமானப்பட்டுவா'' என்று கூறி னார். பார்வதியும் வருத்தத்துடன் யாகசாலைக்கு வந்து, தன் தந்தையான தக்ஷனிடம், ''உங்கள் மகள் தாக்ஷாயிணி வந்திருக்கிறேன்; அப்பா நீங்கள் ஏன் உங்கள் மாப்பிள்ளைக்கு அழைப்பு விடவில்லை'' என்று ஏதும் அறியாமல் கேட்டாள். தக்ஷனும், ''நீ இப்போது என் மகளல்ல; உன் கணவன் உன்னைக் கவர்ந்து சென்றுவிட்டான்; அதனால் நீ ஈசனின் மனைவியாவாய்; அவனையே அழைக்காத போது, அவன் மனைவிக்கு இங்கு என்ன வேலை? ஊர் பேர் தெரியாத ஒருவனின் மனைவியாக இருப்ப தால், என்னுடைய யாகத்தைப் பார்க்கக்கூட அருகதை யற்றவளாகி விட்டாய். இனியும் என்னோடு வீண் வார்த்தையாடிக்கொண்டு, வெட்கத்தை விட்டு நீ இங்கே நிற்பது சரியல்ல; உடனே இங்கிருந்து போய் விடு'' என்றான் ஆங்காரத்தோடு.

தன் தந்தையின் வார்த்தைகளால் தாக்ஷாயிணி கோபாவேசம் கொப்பளிக்க ஆவேசத்துடன் நின் றாள். தேவியின் கோபத்தைக் கண்ணுற்ற அங்கிருந்த அனைவரும் அஞ்சிக்கலங்கினார்கள். பார்வதியும் தக்ஷனை நோக்கி, ''அறிவில்லாத என் தந்தையே! என் நாயகரான சிவபெருமானை இப்படி அவ மானப்படுத்தியதைக் கண்டு என்மனம் வருந்திக் கலங்குகிறது. ஜனனமரணத்திலிருந்து மோக்ஷத்தை அளிக்கும் அந்த சர்வேஸ்வரனை எவனொருவன் நிந்தனை செய்கிறானோ, அந்தப் பாவிக்கு விரை விலேயே சகல தீமைகளும் சம்பவித்துவிடும்! இவ் விதமாகவே வேதங்களில் ஈஸ்வரனுடைய மகிமை களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் பரமசிவனை அவமதித்த மகாக் கொடியவரான நீங் களும், என்பதியின் ஆக்ஞையின்படி விரைவி லேயே அழிந்துவிடத்தான் போகிறீர்கள் என்ப தில் சந்தேகமே கிடையாது!'' என்று கூறிவிட்டு தன் விமானத்தில் ஏறிக்கொண்டு அதி விரைவில் கைலாயமலையை வந்தடைந்தாள். அங்கே தன் நாயகரான மகாதேவனிடம், தன் தந்தையினால், அவமானமடைந்த விஷயத்தைக் கூறி, அவனை உடனே அழித்து நாசமாக்கி விடும்படி கூறினாள். ஈசனும் கண்டு கொள்ளாமல் பேசாமல் இருந்தார். பார்வதியும் பலமுறை எடுத்துக் கூறி வேண்டினாள். கௌரி தேவி தம்மிடம் இவ்வாறு வேண்டி நிற்ப தைக் கண்ட பரமேஸ்வரர், வீரர்களுக்கெல்லாம் சிறந்த வீரரும், பக்தர்களுக்கு நன்மைகளையே செய்ப வரும், பிரும்மாண்டமான தேகக்கட்டைக்கொண் டிருப்பவரும், சகல உலகங்களுக்கும் முக்கிய புருஷனுமான ஸ்ரீ வீரபத்திரரைத் தமது மனதால் எண்ணினார். அப்போது வீரபத்ரர் பரமசிவனது நெற் றிக் கண்ணாகிய அக்னி குண்டத்திலிருந்து வெளிப் பட்டு அங்கு வந்து நின்றார்.

*(அடுத்த இதழில் நிறைவு பெறும்.)*

# இந்து மதம் நல்ல மதம்!

– க. ஜெயராமன், பி.எஸ்சி., பி.எட்.,
உதவி ஆணையர் (நகை சரிபார்த்தல்)
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, திருச்சிராப்பள்ளி - 6.

இந்து மதம் நல்ல மதம்!
இறைவனாய்த் தந்த மதம்!
இந்திய மண்ணின் மீது
சொந்தமாய் விளைந்த மதம்!

சிந்து நதியைப் போல்
ஜீவனாய் வாழும் மதம்!
காலத்தால் முந்து மதம்!
கருத்தில்ஒளி சிந்து மதம்!

வேதத்தால் விளைந்த மதம்!
விவேகத்தில் சிறந்த மதம்!
ஞானத்தால் அடையும் மதம்!
இந்து மதம் நல்ல மதம்!

முக்குணத்தைப் பேசும் மதம்!
திக்கெல்லாம் புகழும் மதம்!
முழு அறிவும் அறிந்து விட்டால்
முக்தியையும் வெல்லும் மதம்!

கோடி கோடி சாத்திரங்கள்
கொண்ட மதம் இந்து மதம்!
கோடி கோடி சூத்திரங்கள்
கொண்ட மதம் இந்து மதம்!
கோடி கோடி தோத்திரங்கள்
கொண்ட மதம் இந்து மதம்!
கோடி கோடி தத்துவங்கள்
கொண்ட மதம் இந்து மதம்!

கோடி கோடிக் காவியங்கள்
கொண்ட மதம் இந்து மதம்!
கோடி கோடி இலக்கியங்கள்
கொண்ட மதம் இந்து மதம்!

பாடிப் பாடிப் பணிந்தாலும்
ஆடி ஆடி மகிழ்ந்தாலும்
நாடி நாடி அனுபவித்தால்
நல்ல மதம் இந்து மதம்!

உயிர்களுக்கும் உயிர்களுக்கும்
உள்ள பந்தம் பேசும் மதம்!
உயிர்களுக்கும் உயிர்களுக்கும்
உள்ள சொந்தம் சொல்லும் மதம்!

உயிர்களுக்கும் இறைவனுக்கும்
உள்ள பந்தம் பேசும் மதம்!
உயிர்களுக்கும் இறைவனுக்கும்
உள்ள சொந்தம் பேசும் மதம்!

உயிர்களுக்கும் உயிர்களுக்கும்
உள்ள சொந்தம் நிலையாது!
உயிர்களுக்கும் இறைவனுக்கும்
உள்ள சொந்தம் அழியாது!

சித்தர்களைத் தந்த மதம்!
ஞானிகளை ஈன்ற மதம்!
ஜீவ முக்தர்களைத் தந்த மதம்!
முடிவில்லாது வாழும் மதம்!

படைப்பதற்கு பிரமன் இருப்பார்!
பாதுகாக்க பெருமாள் வருவார்!
அழிப்பதற்கு ஓர் ஆடல்வல்லான்
அகிலமெல்லாம் ஆள்வதற்கு மகாசக்தி!

காளி என்ன! மாரி என்ன!
கண்கண்ட முருகன் என்ன!
களிறு முகப் பெருமாள் என்ன!
கணக்கில்லா தெய்வங்கள் என்ன!

மாறுபட்ட குணநலன்கள்
வேறுபட்டு நிற்கும் விதத்தை
கோடுபோட்டுக் காட்டும் வித்தை
கொண்ட தத்துவந்தான் நம்தெய்வங்கள்!

ஆதியிலே சாதியில்லை!
பாதியிலே வந்தது தான்!
சோதியிலே இதை எரித்தால்
சொல்லுவதற்கு ஓர் தப்புமில்லை!

நீதியிலே நிலை தவறா
சோதியிலே மனம் வைத்தால்,
பாதியிலே வந்ததுவும் ஒரு நாள்
சோதியிலே எரிந்து ஒழியும்!

மத மாற்றம் தேவையில்லை!
மன மாற்றம் தான் தேவை!
மனமாற உணர்ந்து பார்த்தால்
மணம் நிறை நல்லமதம்
பார் போற்றும் இந்து மதம்!

★★★

# சைவ சமய விளக்கம்

– தி.சு. கோவிந்த சாமி, மதுரை

| | | |
|---|---|---|
| 1. | சமயம் : | சைவம் (மன்பதைக்குப் பொதுவானது)<br>''சிவநெறி வையத்துளார்க்கு வகுத்து வைத்தானே'' - திருமூலர். |
| 2. | வழிபடும் கடவுள் : | சிவபெருமான் |
| 3. | பிரமாண நூல்கள் : | வேதம் (பொது) சிவாகமம் (சிறப்பு) திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சிவபுராணங்கள் இவற்றின் விரிந்த நூல்கள். |
| 4. | கிரியாகாண்டப் பிரமாண நூல் : | சிவாகமங்களும், பத்ததிகளும்<br>''ஆகமம் இன்றேல் ஆலயம் இன்றாம்'' |
| 5. | தத்துவக் கொள்கைகளுக்குப் பிராமண நூல் : | சிவாகம ஞானபாதப் பகுதியும், தமிழ்ச் சிவஞானபோதமும் அதைச் சார்ந்த நூல்களும். |
| 6. | முக்கிய தத்துவக் கொள்கை : | இறை (பதி) உயிர் (பசு) உலகமூலமாகிய மாயை (பாசம்) இம்மூன்றையும் தொடர்புபடுத்தி நிற்பது இறையருள். (அருட்சத்தி) |
| 7. | சமய ஆசாரியர்கள் : | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர். |
| 8. | சந்தான ஆசாரியர்கள் : | மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறை ஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார். |
| 9. | சமய நுழைவுக் கிரியை : | சிவதீட்சை, சைவ ஆசாரியர்களிடம் பெற வேண்டும்.<br>''தீட்சையின்றி ஞானம் உதியா'' (பக்குவம் உண்டாவதற்காகச் செய்யப்படும் மந்திர உபதேசம்) |
| 10. | சிவ சின்னங்கள் : | விபூதி, உருத்திராக்கம்<br>''பரமசிவனமலன் பத்தர்க்குச்சின்னம்<br>உருவுடலில் கண்டியும் நீறும் - சைவசமய நெறி |
| 11. | தோத்திரம் : | தமிழ் வேதமாகிய தேவாரம், திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள் |
| 12. | விதிக்கப்பட்ட புண்ணியச் செயல்கள் : | சிவதீட்சை பெறுவது, விபூதி, உருத்திராக்கந்தரிப்பது, சிவத் தியானம், சந்தியாவந்தனம், பஞ்சாட்சர செபம், சிவபூசை, தமிழ்வேத பாராயணம், சிவாலய வழிபாடு, சிவாலயத் தொண்டு, மாகேசுர பூசை, தீட்சா குரு, வித்தியாகுரு, தந்தை தாய், தமையன் முதலிய பெரியோர்களை வழிபடுதல், இரக்கம்; பொறை, அடக்கம் உடையராய் ஒழுகுதல்.<br>''கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்கமும் ஆகும்'' |

## சென்னை அருள்மிகு காளிகாம்பாள்

**- இராஜேஸ்வரி விஸ்வநாதன்**

*அன்னையவள் காமாட்சி அருள்வடி வடனே*
*சென்னையிலே வாழ்வுதனைச் செழித்திட வந்தாள்*
*முன்னைவினைப் பாவங்களை முழுவதும் போக்கி*
*பின்னை வினைத் தடுத்திடவே பேரருள் தந்தாள்.*

*பேரமகன் பிரியமகன் பெரும்புகழ்ப் பாட*
*பரம்பரையாய் வாழவைக்க பெருந்துணை வந்தாள்.*
*வீரமகன் சிவாஜிக்கு வெற்றி வாகையை*
*வேலனவன் அன்னையவள் விரும்பியே தந்தாள்.*

*வண்ணமதாய் வாழுகின்ற வாழ்க்கை தனையுயர்ச்*
*சின்னமதாய் மாற்றிடவே சிவசக்தி வந்தாள்.*
*எண்ணமதில் நல்லவற்றை எண்ணிய படியே*
*எண்ணியதை ஏழைவாழ்வில் எய்திடச் செய்தாள்.*

*ஆறுதலை அடியவர்க்கு அளிப்பதற்கக*
*மாறுபடு சூரர்களை மாய்க்கவேல் தந்தாள்*
*தருமமிகுச் சென்னையிலே தனவளம் பெருக*
*கருணைவடி வான அன்னை காளி வந்தாள்.*

*விதிகளையே மாற்றிவிடும் வல்லமை கொண்டு*
*மதிபடைத்த மனிதர்களாய் மாற்றிட வந்தாள்*
*புவியுலகில் புண்ணியங்கள் பெருகிடச் செய்ய*
*செவிகளுக்கு நலம்கேட்கும் சிந்தனை தந்தாள்.*

*முன்னோடி சங்கரரின் முன்னடி தொடர்ந்து*
*பின்னடியாய்ச் சொன்னபடி பார்வதி வந்தாள்*
*மண்ணடியில் வாழ்வோர்தம் மனம்படி உயர*
*தன்னடியில் தான்நிறுத்தி தளிர்த்திடச் செய்தாள்.*

*தனிக்கோலம் கொண்டிருக்கும் தாயவள் சக்தி*
*தமிழ்ப்புலவன் பாரதிக்குத் தணல்கவி தந்தாள்*
*திருக்கோலம் கொண்டவளாய்த் தம்புத் தெருவினில்*
*திருபுவனி அருளாசி தந்திட வந்தாள்.*

*புவனேஸ்வரி தவனேஸ்வரி பெரும்புவி நேஸ்வரி*
*சிவனேஸ்வரி தாயேநீ செந்தமிழ் வளந்தா*
*பவதாரிணி பரமேஸ்வரி பவானிபல் பூரணி*
*நவகாளிரா ஜேஸ்வரி நீ நலம்பெற வரம்தா!*

13. விலக்கப்பட்ட பாவச் செயல்கள் : சிவநிந்தை (சிவபெருமானுக்கு ஒப்பாக வேறு கடவுளரை நினைத்தல், கூறுதல்) வேத, ஆகம நிந்தை, சிவத்திரவியங் கவர்தல், கொலை, களவு, புலாலுண்ணல், கள் அருந்துதல், பிறர்மனைவிழைதல், வரைவின் மகளிர்விழைதல், பொய், அழுக்காறு, புறங்கூறல், செய்நன்றி மறத்தல் முதலியன.

14. சிவாலய சேவை : ''சிவாலயந்தோறும் மக்களுக்குச் சைவசமயத்தைத் தேச மொழிகளிலே போதித்தல் வேண்டும்'' எனச் சிவபெருமான் காமிக ஆகமத்தில் விதித்துள்ளார். இதனைச் செய்தல், செய்வித்தல்; தேவார பாராயணமும், சைவப்பிரசங்கமும் செய்தல் செய்வித்தல், ''தேவார பாராயணமும், சைவப் பிரசங்கமும் இல்லாத கோயில் கோயிலன்று''

15. சிவாலயப் பாதுகாப்பு : சிவபெருமானது கோயிலில் அந்நிய மதத்தினரின் பிரசாரமோ, ஊடுருவலோ, வேறு தீங்குகளோ ஏற்படாவண்ணம் பாதுகாப்பது சைவசமயிகள் கடமை.

16. சைவத்தின் சிறப்பு : உயிர் பிறப்பு, இறப்பு உடையது. கடவுள் தோற்றமும் ஈறும் அற்றவர்; உயிர்க்குணமின்மையே கடவுளின் தன்மை, ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' - திருமூலர்.

17. சைவ சாதனைகள் : சரியை, கிரியை, யோகம், ஞானம்

18. பயன் : சாலோகம், சாரூபம், சாமீபம் (பதமுத்தி), சாயுச்சியம் (பரமுத்தி).

★★★

# மாணிக்கவாசகர் கண்ட புதுமைப்பெண்

- டாக்டர் சிவப்பிரியா, தில்லிப் பல்கலைக்கழகம்

ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்தம் மிக்குஉள்ள வெற்பு ஏழுள்
பேறான வேத ஆகமமே பிறத்தலால்
மாறாத தென்திசை வையகம் சுத்தமே.

(திருமந்திரம் 9:8:34)

என வேதங்களையும் ஆகமங்களையும் தோற்றுவித்து, லட்சக்கணக்கான ஆண்டுகளாக ஞானிகளும் தவசிகளும் முனிவர்களும் தெய்வீக மாதர்களும் பக்திப் பெண்மணிகளும் திருத்தொண்டர்களும் வாழ்ந்துவந்த புண்ணியபூமி காலத்தின் கோலத்தால் நாத்திகப்பாம்பின் பயங்கரப் பிடியில் அகப்பட்டு நாத்திகவிஷம் தலைக்கேறி நிலை குலைந்தது. நாத்திக நஞ்சும் மாயசக்திகளும் கடுமையாகத் தாக்க மக்கள் செம்மையான பண்புகளை விடுத்தனர். உலகத்தையும் உடலையும் படைத்து வைத்து உயிர்வாழ்வதற்குத் தேவையான நீர், நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன் போன்றவற்றையும் அளித்துள்ள பரமேசுவரனுக்குச் செய்யவேண்டிய நன்றிக் கடனை (பூசை, வழிபாடு, திருவிழா) மறந்து பக்தி, தெய்வீகம், பண்பாடு, நற்குணம் எல்லாவற்றையும் இழந்து, கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனத் தாறுமாறாகத் திரிந்து போரும் பகையும் கள்ளும் காமமும் பெருக்கி, கொலையும் கொடுமையும் நிரம்பி நாவில் தழும்பு ஏற்படும் அளவிற்கு வாய் ஓயாது நாத்திகம் பேசி வாழ்ந்தனர்.

உலோகாயதன் எனும் ஒண் திறல் பாம்பின்
கலாபேதத்த கடுவிடம் எய்தி அதில் பெரு மாயை
ஆறுகோடி மாயா சக்திகள் வேறு வேறு தம்
மாயைகள் தொடங்கின
ஆத்தமானார் அயலவர் கூடி நாத்திகம் பேசி
நாத்தழும்பு ஏறினர்

என நாத்திகப் பிசாசு மிதமிஞ்சி நின்று மக்களை ஆட்டிவைத்த சமுதாயத்தில் ஆணவம் மிக்க ஆணாதிக்க வெறியால் பெண்களின் உரிமையும் சுதந்திரமும் பறிக்கப்பட்டன. கல்லையும் புல்லையும் கட்டிவைத்தாலும் கணவன் என்று கொண்டாடவேண்டும், கடவுளைத் தொழக்கூடாது, கணவனைத் தொழுது எழுந்து, அவன் காலடியில் கிடக்க வேண்டும். அதுதான் கற்பு, சிறப்பு, பெருமை, பெண்ணாய்ப்பிறந்த பாக்கியம் என்றெல்லாம் வற்புறுத்தும் ஆணாதிக்கப் பேய் தலைவிரித்தாடியது.

சூரியன் மறையும்போது இருள் சூழ்ந்து ஆதிக்கம் செலுத்துவதுபோல் ஞானஒளி இல்லாத போது அஞ்ஞான நாத்திகம் ஆட்டிப்படைக்கின்றது. கதிரவன் உதயமாகும்போது இருள் ஓடி விலகுவதுபோல் ஞானம் தோன்றும்போது நாத்திகம் மடிகின்றது. கொடிய அஞ்ஞான நாத்திக இருளை ஓட்டும் ஞான சூரியனாகத் தோன்றியவர் மாணிக்க வாசகர். நாத்திக நஞ்சை உட்கொண்டு, பக்தி அமுதத்தை வழங்கி சாக்கடையில் இருந்த சமுதாயத்தைச் சந்தன மலையில் ஏற்றினார். கள்ளையும் மாமிசத்தையும் வயிறு புடைக்க உண்டு காமத்தில் மூழ்கிப்போரிலும் பகையிலும் திளைத்து விலங்குகளை விடவும் மோசமாகப் போயிருந்த சமுதாயத்தை மீண்டும் செம்மையான பக்திப்பாதையில் தூயநெறியில் செலுத்தினார்.

சிவ சிவ என்றிடத் தீவினை மாளும் என்பதால், நின்றாலும் கிடந்தாலும் இருந்தாலும் எழுந்தாலும், எத்தொழில் செய்தாலும் எந்த விளையாட்டு விளையாடினாலும் இறைவன் புகழ் பேசிப் பாடிச் செய்யுமாறும், ஈசன் பெயரும் மகிமையும் பாடி ஆடுமாறும் பாடல்கள் பாடித் தமிழையும் தமிழகத்தையும் மீண்டும் புனிதமாக்கி அரும்பெரும் பண்பாடு, கலாச்சாரம், மரபு இவற்றுக்கெல்லாம் புத்துயிர் அளித்து வாழ்வித்த பெருமை நம் மாணிக்க வாசகரையே சாரும்.

ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு
அருளியவாறு
பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க

எனத் தான் கண்ட இறையை, ஆண் என்றோ பெண் என்றோ சுட்டியறிய முடியாத பரம்பொருளை, பால் வேறுபாடுகளையெல்லாம் கடந்து உள்ள மெய்க்கடவுளை, யாவரும் காணுமாறு காட்டி, யாவரும் பெறுமாறு செய்து தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனத் தன் தெய்வீக அனுபவத்தை, தெய்வீக வரலாற்றை, அரிய ஓங்கார ஞானத்தை, மெய்ஞ்ஞான விஞ்ஞான உண்மைகளைப் பொதுமக்கள் அறிந்த பாடல் வகைகளில்,



பொதுமக்களுக்குப் புரியுமாறு எளிய நடையில் இனிய மொழியில் பாடினார். புலவர் என்று புகழ் பெறுவதற்காகவோ ஆசையினாலோ பாடப்படும் வீண்வர்ணனைகளையும் கற்பனைகளையும் கொண்ட பாடல்களாக இல்லாமல், முற்றிலும் அனுபவப் பாடல்களாக திருவாசகம் விளங்குகிறது. கற்றவர்கள், கல்லாதவர்கள், படித்தவர், பாமரர் என எல்லோருக்கும் அன்றாட வாழ்வில் ஏற்படும் துயரங்களையும் கவலைகளையும் தீர்த்து இன்பமும் அமைதியும் வழங்கி அன்றாட வாழ்க்கைக்கும் வழிபாட்டிற்கும் உரிய தெய்வீகப்பாடல்களாக உள்ள திருவாசகம் பொதுமக்களுக்காகப் பாடப்பட்ட பொதுமக்கள் பாடல்களாகும்.

ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை
பாண்டி நன்னாடுடையான் படையாட்சிகள்
பாடுதும்

எனக் காதல் கவிதைகளிலும், ஆற்றுப்படை, பள்ளியெழுச்சி, புனலாட்டு, படையாட்சி, படையெழுச்சி எனப் பிற பாடல் வகைகளிலும் பரமனைப் பாடிப் பாடி பக்தியமுதத்தை வாரி வழங்கிய திருவாசகப் பாடல்களில் உவமைகள் கூட பொதுமக்கள் எல்லோருக்கும் தெரிந்த, அன்றாடம் பயன்படுத்தும் உவமைகளாக விளங்கி பொதுமக்களின் வாழ்க்கைப் பாடல்களாகி வழிகாட்டுகின்றன. ஆடவர்களின் கைம்பொம்மையாக இருந்து உரிமையும் சுதந்திரமும் இழந்து கிடந்த பெண்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டி சுதந்திரமும் உரிமையும் தைரியமும் வழங்கியவை மாணிக்கவாசகரின் பாடல்கள்.

பிரம்மன், விஷ்ணு, ருத்திரர்கள், அம்மன் போன்ற தேவதேவியர் முதலாகப் புல்வரை யாவற்றையும், எல்லோரையும் படைத்தும் முடித்தும் ஐந்தொழில் புரியும் பரமசிவம் திருக்காட்சி தந்து ஓங்காரம் உபதேசித்து ஆட்கொண்டு பலப்பல முறையும் பலப்பலவகையிலும் பேரருள் புரிந்த தெய்வீகப் பேரானந்தத்தையெல்லாம் எடுத்துச் சொல்லிப் பேரின்ப வெள்ளத்தில் ஆழ்த்தும் அற்புதப் பாடல்களால் திருவாசகத்தேன், திருவாசகத் தெள்ளமுது என்று போற்றப்படும் மணிவாசகத்தில் பதினான்கு பதிகங்கள் பெண்கள் பாடுவன போல் பெண்மணி வாசகங்களாக உள்ளன. திரு அம்மானை, அன்னைப் பத்து, திருவுந்தியார், திருவெம்பாவை, குயிற்பத்து, திருக்கோத்தும்பி, திருப்பூவல்லி, திருச்சாழல், சென்னிப்பத்து, திருத்தசாங்கம், திருத்தெள்ளேணம், திருத்தோள்நோக்கம், திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூசல் ஆகிய பதிகங்கள் எல்லாம் பெண்குரலில் ஒலித்து மகளிரின் அறிவையும் சிந்தனைகளையும் வாழ்வையும் அழகாக்கிப் பெண்ணுரிமையையும் சுதந்திரத்தையும் பேசுகின்றன.

''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை
யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண் மாதே
வளருதியோ வன்செவியோ நின்செவிதான்''
''அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்து உன்கடை திறவாய்''

என உறங்கிக் கிடந்த பெண்களைத் தட்டிஎழுப்பி, விழிப்புணர்ச்சியைத் தந்து மூடியிருந்த பக்திக் கதவுகளையெல்லாம் திறக்கச் செய்தார். துயில் எழும்போது பரமனைப்பாடி, மற்றவர்களைத் துயில் எழுப்புமாறும் பரமனைப்பாடி எழுமாறும் ஈசன் புகழ்பாடி மற்றவர்களைத் துயில் எழுப்புமாறும் சர்வேசுவரனின் புகழ்பாடி நீராடுமாறும், சதாசிவ

னின் மகிமை பாடி பூப்பறிக்குமாறும், முழுமுதல் வன் முக்கண்ணனைப் பாடி உரலில் இடித்தல், அரைத்தல் போன்ற வேலைகளைச் செய்யுமாறும் பாடிப் பாடி புனித வாழ்விற்கு வழிகாட்டினார்.

ஈது என்ன உறக்கமோ வாய் திறவாய்.......
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைப்பங்காளனையே பாடு

என முழுமுதல் இறைவனது பேர்பாடி துயில் எழுமாறும் துயில் எழுப்புமாறும் பாடினார்.

''உடையான் பொற்பாதம் ஏத்தி இருஞ்சுனை
நீராடு''
''கண்ணார் அமுதமாய் நின்றான் கழல் பாடி
பெண்ணே இம்பூம்புனல் பாய்ந்தாடு''

என எல்லா உயிர்களுக்கும் உரிமையாளனான பரமேசுவரனைப் பாடி நீராடுமாறு அறிவுறுத்தினார்.

அம்பலத்தே ஆடுகின்ற புனையாளன் சீர்பாடிப்
பூவல்லி கொய்யாமோ

என இயக்கத்திற்குக் காரணமான நடராசனின் புகழ் பாடிப் பூப்பறிக்குமாறு பாடினார்.

பூவியல் வார்சடை எம்பிராற்கு பொன்
திருச்சுண்ணம்
இடிக்க வேண்டும் மாவின் வடுவகிர் அன்ன
கண்ணீர்
வம்மின்கள் வந்து உடன் பாடுமின்கள்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடியாடப்
பொற்சுண்ணம்
இடித்து நாமே
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து
பொற்சுண்ணம்
இடித்து நாமே

எனப் பரமனது திருமுழுக்காட்டிற்கு மங்கலப் பொடி இடிக்குமாறும், ஈசன்புகழ் பாடிப்பாடியும் பாடச் சொல்லியும் இடிக்குமாறும் பாடி நன்னெறி காட்டினார். ஊஞ்சலாடும்போதும், கழங்காடும் போதும் மற்றும் பந்து, கண்ணாமூச்சி, நொண்டி, பாண்டி, கும்மி, கோலாட்டம் போன்று எந்த ஒரு விளையாட்டை விளையாடும்போதும் பயனற்ற ஒலியெழுப்பிக் கூச்சல் போடுவதை விடுத்து உடலுக்கும் மனதிற்கும் உயிருக்கும் நலம் பயக்கும் பரமேசுவரனின், ஆத்மநாதனின் பெருமை பேசிப் பாடி விளையாடுமாறு பாடிக்காட்டினார்.

''மாலுக்கு அரியானை வாயார நாம் பாடிப்
பூலித்து அகம் குழைந்து பொன்னூசல் ஆடாமோ
அனலேந்தி ஆடுவான் சேவடியே பாடுதும் காண்
அம்மானாய்''
''குன்றாத சீர்த்தில்லை அம்பலவன் குணம்
பரவித்
துன்றார் குழலினீர் தோள்நோக்கம் ஆடாமோ
ஓரம்பே முப்புரம் உந்தீபற ஒன்றும் பெருமிகை
உந்தீபற''
''அயனும் திருமாலும் வான் நாடர் கோவும்
வழியடி யார்சாழலோ''
''திருவாரூர் பாடி நாம் தெள்ளேணம்
கொட்டோமோ''

என எந்த விளையாட்டு விளையாடினாலும் எல்லோருக்கும் இறைவனான பரமேசுவரனுடைய புகழ், திருநாமம், மகிமை, திருத்தலங்கள் மற்றும் அருட்செயல்களைப் பாடியாடுமாறு நெறிப்படுத்தினார். சிறுவயதிலிருந்தே சிவநாமத்தால், சிவசிந்தனையால் மனமும் உயிரும் நலமடைவதால் வாழ்வு முழுவதும் தூய்மையாகி செம்மையான பண்புகளும் நற்குணங்களும் பண்பாடும் நிறைந்து மேலோங்குகின்றன.

பெண்களின் அறிவிலே அழகைக்கண்ட அதிசயப் புலவர் மாணிக்கவாசகர். பெண்களின் சிந்தனை, அறிவு அழாக இருக்கவேண்டும் என்று விரும்பிய மாணிக்கவாசகர்

சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை

என சிவநாமம் பாடி அறிவை, சிந்தனையை அழகாக வைத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தினார். ஆடல் நாயகன் சிவம் இல்லாத இடம் அசைவற்று சவமாதலால் அங்கு மங்கலம் இல்லை. ஆதலால் அழகும் இல்லை. சிவநாமம் இல்லாத தட்சன் யாகம் அமங்கலமாய், அழுகையாய். துயரமாய்ப் போக சக்தியும் சவமானாள். சிவசிவ எனச் சிவம் இருக்கும் இடத்தில் ஆடலும் பாடலும் அழகும் ஆனந்தமும் அலைமோதுகின்றன. எனவே சிவ நாமத்தை எப்போதும் எங்கும் பாடச் சொன்னார்.

சிந்தை அழகானால் கள்ளத்தனத்திற்கு இடமில்லை. கள்ள உறவை வளர்த்துத் தானும் கெட்டு குடும்பத்தையும் சீர்குலைக்காமல் முறையோடு உறவை வளர்த்து பண்புள்ள ஒழுக்க நெறியில் செல்வதற்காக மனம்கவர்ந்தவரைப் பற்றிப் பெற்றவரிடம் எடுத்துச் சொல்லும் துணிவைப் பெண்களுக்கு வழங்கி

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்து இருப்பாரால் அன்னே என்னும்
என் உள்ளம் கவர்வரால் அன்னே என்னும்
திரள் தோள் கூடுவேன் கூடி முயங்கி
மயங்கி நின்று ஊடுவேன்

என்று பாடி வழிகாட்டினார்.

கல்லானாலும் (கல் நெஞ்சன்) பரவாயில்லை. புல்லானாலும் (புன்மையாளன்) பரவாயில்லை கணவன் என்று கொள்ளவேண்டும். கடவுளைத் தொழக்கூடாது. கணவனைத் தொழுது அவன் காலடியில் கிடந்து சாகவேண்டும். அதுவே சிறப்பு என்றெல்லாம் இருந்த அறிவற்ற, கொடூரமான அடிமை வாழ்வை எதிர்த்து கணவன் என்றால் இப்படிப் பட்டவனாகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யும் மனித உரிமையையும் திருமணத்திற்குப் பின் தன் மனவிருப்பங்களுக்கு, உணர்ச்சிகளுக்கு ஏற்ப வாழும் சுதந்திரத்தையும் மாணிக்கவாசகர் பெண்மணிகளுக்கு வழங்கிப்பாடினார்.

''உன் சீரடியோம் உன்னடியார் தாள் பணிவோம்
ஆங்கு அவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவன் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்''
(பரிசு- தன்மை, முறை)

''நம் பணி கொண்டவன்....
மாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி மன்னிப்
பொலியுமே''

என இறையடியவர்களே கணவர்களாக வரவேண்டும், சிவவழிபாட்டையும் திருப்பணிகளையும் தொடர்ந்து செய்வதற்கு விருப்பமுடன் வழிநடத்துபவர்களாக இருக்கவேண்டும் எனச் சொல்லும் உரிமையையும் சுதந்திர வாழ்க்கையையும் அளித்து மனிதப் பிறவிகளாக வாழவழிகாட்டினார்.

பெண்களைக் காமப்பொருளாகக் காணாமல் தம்மைப் போன்றே இறைவனால் படைக்கப் பட்ட மனிதப்பிறவி என்ற மதிப்பை அளித்து பெண்களிடம் பக்தியைக் காணுமாறு பாடி ஆண்களின் பார்வையில் தெய்வீக ஒளியேற்றினார் மாணிக்கவாசகர்.

ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று
அவன் வாங்கிய என் பாசத்தின் கார் என்று
அவன் தில்லை இன்னொளி போன்று
அவன் தோள் பூசத்திருநீறு என வெளுத்து
ஆங்கு அவன் பூங்கழல் யாம் பேசத்
திருவார்த்தையின் பெருநீளம் பெருங்கண்களே

என்ற திருக்கோவையார்ப் பாடலில் பெண்களின் கண்கள் சிவபக்தியைப் போன்று அகலமானவை. சிவன் நீக்கிய அஞ்ஞான ஆணவ இருளைப் போன்று கருமையானவை, பரமனின் தில்லைப் பொன்னம்பலம் போல் ஒளிபொருந்தியவை. ஈசன் திருமேனியிலுள்ள திருநீறு போல் வெண்மையானவை. இறைவன் திருவடி பாடும் சிவ துதியைப்போல நீளமானவை என்று பாடிய மாணிக்கவாசகர் பெண்களின் கண்களில் தெய்வீகத்தைக் கண்டு போற்றி தெய்வ சிந்தனையில் மூழ்குமாறு ஆண்களுக்கு வழிகாட்டினார்.

ஆணவம் மிக்க ஆணாதிக்க வெறி தலைக்கு மேல் ஏறி, அவரும் தெய்வம், இவரும் தெய்வம் என பிறந்து இறந்த ஆண்களைத் தெய்வம் என்று சொல்லிப் புலம்பும் பொய்த்தெய்வக் கொண்டாட்டத்தை ஒழித்து, பிறப்பும் இறப்பும் இல்லாத, தோற்றமும் முடிவும் இல்லாத உண்மையான கடவுளை வழிபடுமாறு வழிகாட்டினார்.

அத்தேவர் தேவர் அவர்தேவர் என்று இங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாத என் பற்றுஅற நான் பற்றி
நின்ற
மெய்த்தேவர் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ

என மெய்க்கடவுளை நாடிவழிபட்டு உண்மையான பக்தர்களாக வாழுமாறு வழிகாட்டினார். உடலைப்போன்று அழியும் தேவனையோ மனிதனையோ பொய்யாகக் கடவுள் என்று வழிபடாமல், உயிர் போன்று உலகங்களும் உயிர்களின் இச்சை, கிரியை, ஞானசக்திகளும், செயல்படுவதற்குக் காரணமான பரம் பொருளை பரமேசனை வழிபட்டு மெய்யான பக்தி நெறியில் செல்லுமாறு வழிபடுத்தினார். ஒருநாட்டில் ஒரு ஊரில் ஒரு நிறத்துடன் உடலுடன் பிறந்து பெயர் சூட்டப்பட்டு வளர்ந்து உறவும் பகையும் கொண்டு வாழ்ந்து மடிந்துபோன ஆடவனையோ மகளிரையோ தெய்வம் என்று கொண்டாடி செயற்கையான போலித் தெய்வங்களைப் படைக்காமல்

''நிறங்கள் ஓரைந்து உடையாய்
''எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''
''ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர் ஆர் உற்றார்
ஆர் அயலார்?''

''ஒருநாமம் ஒருவம் ஒன்றும் இல்லாற்கு
ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம்
கொட்டாமோ''

''ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான்
மெய்யே நிலைபெறாய் எப்பொருட்கும்
தானேயாய்
யாவைக்கும் வீடாகும் அப்பொருளாம் நம்
சிவனைப் பாடுதும்

என எல்லா நாட்டவர்க்கும் இறைவனான சிவனை, எல்லா ஊருக்கும் எல்லாப்பெயருக்கும் உரிய ஈசனை, எல்லா உருவங்களையும் எல்லா நிறங்களையும் கொண்ட மெய்க்கடவுளை, ஆண் பெண் இருபால் என எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான இயற்கைக் கடவுளை, எல்லாவற்றுக்கும் முடிவுநிலையாக உள்ள சிவம் என்னும் செம்மைப் பரம்பொருளைப் பாடி வழிபட்டு மெய்யான இறையடியவர்களாக, உண்மைத் திருத் தொண்டர்களாக வாழுமாறு செய்தார்.

சமூகத்தில் உள்ள ஆண் பெண் வேறுபாடுகள் யாவும் பெண்களை, மனைவியரை மனிதப் பிறவிகளாக நினைக்காமல் மரப்பொம்மைகளாக நினைத்து அடக்கியாள விரும்பும் ஆணாதிக்க வெறியர்களால் உண்டாக்கப்பட்ட அக்கிரமச் செயல்களே! ஈசன் படைப்பில் ஆண் பெண் இருவரும் சமமே, கடவுள் ஆணுமல்ல பெண்ணுமல்ல, ஆண் பெண் வேறுபாடுகளையெல்லாம் கடந்து உள்ள பரம்பொருள் என்பதை உணர்த்திப் பாடினார். ஆண் என்றோ பெண் என்றோ சுட்டியறியப்பட முடியாமல் பால்வேறுபாடுகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு எல்லாவற்றையும் கடந்து உள்ள முழு முதற்கடவுள் தன்னை வந்து ஆட்கொண்டு ஓங்காரம் உபதேசித்த அற்புதத்தை

''புரிசடை முடிதனில் இளமதி அது வைத்த
அன்னை
ஆண்டு தன் அடியரில் கூட்டிய அதிசயம்
கண்டாமே''
''பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கு
ஒளி சேர் விண்ணாகி
மண்ணாகி இத்தனையும் வேறாகிக் கண்ணார்
அமுதமாய் நின்றான்''
''முதலாய முதல்வன்தான்... அம்மை எனக்கு
அருளியவாறு''
''ஆணே பெண்ணே ஆரமுதே''
''தாயான ஈசற்கே''
தயாவானன தத்துவனே''
''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே''
''தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்
தொன்மைக்கோலமே''
''பெண் ஆண் அலி எனும் பெற்றியன்''

என இன்னது என்று சுட்டிக்காட்டி ஒன்றில் அடக்க முடியாத மெய்க்கடவுளை, இறைவனை, பரம் பொருளின் தன்மையைப் புலப்படுத்திப் பாடினார். பரமேசுவரனைக் கண்ணாரக் கண்டு களித்த மாணிக்க வாசகர் அவன் எத்தனைக் கருணையாளன், கடவுள் எவ்வளவு சிறந்தவன், இறைவன் எத்தனைப் பேரருளாளன், பரமன் எவ்வளவு பரிவு உள்ளவன் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி நெஞ்சம் நெகிழ்ந்து தன் அனுபவத்தைக் கூறும்போது

''கன்றை நினைந்து எழு தாயென வந்த கணக்கு''
''தாயிற்சிறந்த தயாஆன தத்துவனே''
''பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ''

எனப் பசுவைப் போன்றவன், தாயை விடச் சிறந்தவன் என்று கூறிப் பசுவையும் தாய்மார்களையும் உலகத்தின் உச்சியில் வைத்துப் பெண்ணின் பெருமையைப் புலப்படுத்தினார்.

படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் புரிந்து உயிர்களுக்கு நன்மை செய்யும் பரமசிவனைத் தன்மேனியில் தாங்கிக் கயிலையைக் காத்து நாளும் அருகிருந்து முதல் பூசைபுரியும் உரிமையைப் பெற்ற பிரம்மவிஷ்ணு முதலான வானவர்களுக்கு வழிகாட்டுகின்ற நந்தி தேவரே மாணிக்கவாசகராக வந்து பிறந்தலால் பரமேசுவரனைப் பிரிந்து இவ்வுலகில் வாழமுடியாமல் துடிதுடிக்கும் தெய்வப்பிரிவுத் தவிப்பால் வெளிப்பட்டுக் கல்நெஞ்சையும் கசிவித்துக் கரைத்து உருக்கிக் கண்ணீர் பெருக்கும் பாடல்களால் ''திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்'' என்று போற்றப்படும் மணிவாசகத்தினால் சமுதாயம் மாபெரும் மாற்றத்தைப் பெற்று மீண்டும் பக்தியான செம்மை நெறியில் சென்றது. மன்னர்களும் மக்களும் விடியற்காலையிலே எழுந்து ஈசன் புகழ் பாடி நீராடி கோயிலுக்குச் சென்றனர். வேதமந்திரங்கள் ஒலிக்க, பௌராணிகர்கள் வாழ்த்த, இசைக்கருவிகள் முழங்க அன்றாட நாள் வழிபாட்டைத் துவக்கத் திருப்பள்ளியெழுச்சி பாடுவதற்காக மக்கள் சிவசிவா, ஹரோ ஹரா (ஹர+ஹரா) என்ற முழக்கத்துடன் திரண்டு சென்றதைச் சங்க காலப் பாடல் படம் பிடித்துக் காட்டுகின்றது.

காலையே எழுந்து தொழுவார்
ஏலமலி குழலார் இசைபாடி எழுந்து அருளால்
சென்று
சோலைமலி சுனையில் குடைந்தாடித் துதிசெய்ய
அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதலியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமணல் அருவியில்
மாதரும் மைந்தர் தாமும் சுனையிடை மூழ்கித்
தொடர்ந்த சிந்தை பன்னிய பாடல் பயிலும்
பனித்துறை கைதொழுத ஏத்தி ஆயும்
ஆயமொடு அயரும்
தாய் அருகா நின்று தவத்தைநீராடுதல்
நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம்

என ஆடவர்களும் பெண்களும் தாய்மார்களும் எம்பாவை பாடி நீராடுவதற்காக அதிகாலையில் ஈசன் புகழ்பாடி முதலில் எழுந்தவர்கள் மற்றவர்களை யும் எழுப்பி வழிகாட்டி நீர்நிலைகளுக்குச் சென்று நீராக நின்றருளும் பரமேசன் ஜலகண்டனைத் தொழுது பரமன் புகழ் பாடி வணங்கும் பக்தி மிக்க காட்சியை சங்ககாலப் பாடலும் தேவாரமும் படம் பிடித்துக் காட்டுகின்றன. மன்னர்களும் வள்ளல்களும் மக்களும் கையில் பூசைப் பொருட்களுடன் நெஞ் சில் அஞ்செழுத்தும் நாவில் சிவ நாமமுமாய் கோயிலுக்குச் சென்றுவிட்டதால் மன்னர்களையும் செல்வந்தர்களையும் அண்டி வாழ்ந்த புலவர்களும் கலைஞர்களும் கோயில்களை நாடிச்சென்று பக்திப் பாடல்களைப் பாடி இறைவனை வணங்கினர். மது நெடியும் மாமிசக் குமட்டலும் மாதர் போகமும் போரும் பிணக்குவியலும் இரத்த வெள்ளமும் பெருகி யிருந்த தமிழ்க் கவிதைகளில் பக்தி வெள்ளம் பாய்ந் தது. தமிழ்மொழி தெய்வீக இலக்கியங்களால் நிரம்பி மீண்டும் முற்றிலும் தெய்வத் தமிழானது. மணி வாசகத்தின் பெண்மணிவாசகங்களால் காரைக்கால் அம்மையார், ஔவையார் போன்ற பக்திப் புலவர் களின் பேரின்பப் பாடல்களையும் புனித வாழ்க்கை யையும் த்மிழகம் பெற்றது. தவறான பாதையில் சென்ற கணவர்களைத் திருத்தி நன்னெறியில் செலுத் திய மங்கையர்க்கரசியார், திருநீல கண்டத்துக்குயவ னாரின் மனைவியார் போன்ற ஒழுக்கமும் தெளி வான சிந்தனையும் பக்தியும் வீரமும் கொள்கை யும் கொண்ட இல்லத்தரசிகளை உலகம் கண்டது. வரலாற்றுக் காவியமான பெரியபுராணத்தில் புகழ்ந்து போற்றப்படுமாறு வாழ்ந்த பலப்பல பெண்ணடிய வர்களையும் பக்தியின் சிகரத்தில் நின்ற எண்ணற்ற இல்லத்தரசி களையும் தாய்மார்களையும் சமுதாயம் கண்டது.

மாணிக்கவாசக நின் வாசகத்தைக் கேட்ட போதிலும் கீழ்ப்பறவை சாதிகளும் வேட்டமுறும், விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டம் உறும் என விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கூட பக்தி யுணர்வை உண்டாக்கி மெய்ஞ்ஞானத்தில் ஈடுபட வைக்கும் மாணிக்க வாசகரின் திருவாசகத்தால் வேத ஒலியும் ஆகம ஒலியும் வழிபாடும் வேள்வி களும் திருவிழாக்களும் பக்தியும் ஒழுக்கமும் செம்மை யான பண்புகளும் மிக்க தெய்வ மணம் வீசும் புண்ணியத்தமிழகம் மீண்டும் தோன்றியது.

ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது இவ் வணி நலமே என மாணிக்கவாசகர் வாழ்த்தியதற்கு ஏற்ப சிவநாமத்தால் சிவசிந்தனையால் அபாயங்கள் நீங்கிப்போய் எங்கும் தங்கிய சிவனருளால் நாடு முழுவதும் முடிவில்லாத ஆனந்த வெள்ளத்தில் திளைத்து மகிழ்ந்ததை

''சிவாய சிவசிவ என்று என்றே சிந்தை
அவாயம் கெட நிற்கும் ஆனந்தமாமே
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவனருள்''

என்று திருமந்திரம் காட்டுகின்றது. திருவாசகத்தின் திருப்பள்ளியெழுச்சியைப் பின்பற்றி வடநாட்டி லும் சுப்ரபாதங்கள் தோன்றின. திருவாசகத்தி னால் நாட்டுப்புறப் பாடல்களும் செந்தமிழ் இலக்கிய மாய், பேரின்பப் பாடல்களாய்ப் பெருமைபெற்றன.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி...........
........ நின்ற இத் தாவரச் சங்கமத்துள் எல்லாப்
பிறப்பும் பிறந்து

என்ற திருவாசக ஞானத்தைப் பின்பற்றி தாவரத் திற்கு உயிர் உண்டு விஞ்ஞானமும் உரைத்தது.

அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்

என்ற திருவாசக உண்மையை அடியொற்றி உலகம் உருண்டையானது என்று மேல்நாட்டு விஞ் ஞானமும் முழங்கியது.

கிடப்பன கிடாஅய் நிற்பன நிறீஇச்
சொற்பதம் கடந்த தொல்லோன்

என்ற திருவாசகப் பொருளை உணர்ந்த மேல் நாட்டு விஞ்ஞானம் நியூட்டன் கொள்கை என்று கூறித் தன்மேல் ஏற்றிப் பெருமை பேசியது. இவ் வாறு மணிவாசகங்கள்

யாவர்க்கும் ஊதியமே

என எத்துறையினர்க்கும் எல்லோர்க்கும் பயன் தந்து மாபெரும் ஊதியமாக விளங்குகின்றது. தமிழர் களும் பக்தர்களும் மட்டுமன்று பெண்களும் விஞ் ஞானிகளும் எந்நாட்டவர்களும் மாணிக்கவாசக ருக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளனர். ஆத லால் மாணிக்கவாசகரது முக்தி நாளை உலகம் முழுவதும் குருபூஜை செய்து வணங்க வேண்டும்.

★★★

# அருள் மழைபொழியும் அறுமுகச் செவ்வேள்

- பாம்பனார் பைந்தமிழ் அரசு ஸ்ரீலஸ்ரீ கருமாரி தாசர்

''ஓம் நமசிவாய,'' ''ஓம் நமசிவாய'' என்ற சப்தம் ஒலித்தது; அரஹர என்ற சப்தம் வானைப் பிளந்தது. முப்பது முக்கோடி தேவர்கள், நாற்பத் தெண்ணாயிரம் முனிவர்கள், கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர், கந்தருவர், யக்ஷர் முதலானவர்களெல் லாம் சிவபெருமானைப் போற்றி, புகழ்ந்து, வாழ்த்தி, வணங்கி மலர்தூவி வழிபட்டனர். நந்தியம் பெருமான் பொற் பிரம்பைக் கையிலேந்திக் காவல் புரிந்து கொண் டிருந்தார். நாரதர், தும்புரு முதலானவர்கள் இனிய கானம் பாடிக் கொண்டிருந்தனர். நவமணிகள் இழைத்த ஆசனத்தில் உமாதேவியாரும் சிவபெருமானும் வீற்றிருந்த காட்சி அருள் மாட்சியாக விளங்கிக் கொண்டிருந்தது. சிவபெருமானுடன் வீற்றிருந்த பராசக்தி திடீரென்று ஏதோ தன்மனதில் ஒன்றை நினைத்து எழுந்து பரமேஸ்வரனை வணங்கினாள்.

பரமேஸ்வரன், ''தாட்சாயிணி! காலையிலும் மாலையிலும் என்னை முறையாக வணங்கி வழி படும் நீ இன்று எதிர்பாராத வகையில் இந்த நேரத்தில் வணங்கியது எதற்காக? ''என்று கேட்டார். தாட்சாயிணி சிவபெருமானைப் பார்த்து, ''பெருமானே! தேவரீரை நிந்தித்தவன் தட்சன். சிவநிந்தை புரிந்தவன் அதற் குரிய தண்டனையை அடைந்து விட்டான். ஆனாலும் இந்த உடம்பு அவன் வளர்த்த உடம்பு; தாட்சாயிணி என்ற பெயர் அவன் வைத்த பெயர். இந்தப் பெய ருடனும், உடம்புடனும் இருக்க நான் விரும்ப வில்லை. உடலை விட்டுவிட நினைக்கின்றேன். தாங்கள் திருவருள் புரிந்து உத்தரவிட வேண்டு கிறேன்.'' என்றாள்.

பதிபக்தி உணர்ந்த பரமசிவன், ''உனது பக்தியை மெச்சுகிறேன். நீ நினைந்தவாறே நிறை வேற்ற அருள்புரிகிறேன். இமயமலை அரசன் உன்னை மகளாகப் பெறுவதற்கு பல்லாண்டு காலங் களாக தவம் புரிந்து கொண்டிருக்கிறான். நீ அவ னுக்கு அருள் புரிந்து, அவன் மகளாகப் பிறந்து. ஐந்தாவது வயதிலிருந்து என்னை நோக்கி தவம் செய்; அப்போது வந்து உன்னை திருமணம் செய்து திருவருள் புரிகிறோம்.'' என்றார்.

எம்பெருமான் அருள் புரிந்தவுடன், தாட்சாயிணி உடல் மறைந்து விட்டது. ஞானசக்தி யாக விளங்கும் பார்வதி ஒரு தாமரைத் தடாகத்தில் தாமரை மலர் மீது குழந்தையாகக் காட்சி தந்தாள். அந்தத் தடாகத்தின் அருகில் தவம் புரிந்திருந்த பர்வத மகாராஜன், சந்தியா வந்தனம் செய்ய தடாகத்தில் இறங்கினான். அழகே உருவாகிய ஞானசக்தியாகிய குழந்தையை கண்டு களித்தான். பராசக்தி திரு அவ தாரம் செய்தாரேயன்றி பெண்வயிற்றில் பிறக்க வில்லை. உலகமக்களைக் கருவில் சுமக்கும் உத்த மியை யார் கருவில் சுமக்க முடியும்? தெய்வக் குழந்தையைக் கண்ட இமவான் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, ''அடியேனை ஆட்கொண்ட அன்னையே! மகளாக வந்த மகா சக்தியே!'' என்று கையால் எடுத்தணைத்து உச்சி மோந்து சென்னிமேல் வைத்துக் கூத்தாடினான். குதூகலத்துடன் அரண்மனை சென் றான். தமது பத்தினியாகிய மேனையின் கரத்திலே குழந்தையைக் கொடுத்தான். அளவில்லாத மகிழ்ச்சி யடைந்தாள் மேனை. தெய்வக் குழந்தையை தொழுது வாங்கினாள். மார்பில் அணைத்தாள்; அவள் அன்பு சுரந்தது போலே பாலும் சுரந்தது.

பெண் குழந்தை என்றாலே பொதுவாக தாய் மார்களுக்கு மகிழ்ச்சி. உலகநாயகியே பெண்ணாக அவதரித்தாள் என்றால் சொல்லவா வேண்டும்? தண்டை, சங்குவளை, ரத்தினச்சுட்டி, மதாணி, பரி புரபம், பொன்தோடு முதலான பொன்னாபரணங் களைக் குழந்தைக்கு அணிவித்து பொன்னால் செய்யப் பட்ட தொட்டிலில் இட்டுத் தாலாட்டினாள். பர்வத ராஜனுககு மகளாக அவதரித்ததால், குழந்தைக்கு பார்வதி என்று பெயரிட்டனர். இமவானும், மேனை யும் குழந்தையை அருமையாக அன்பினாலே வளர்த்தார்கள்.

''மன்னுயிர் புவன மேனை மற்றுள
பொருளுக்கெல்லாம்
அன்னையா யுதவி நாளும் அவற்றினை
வளர்த்து நிற்பாள்
தன்னையும் வளர்ப்பா ருண்டோ வளர்ந்தது
சழக்கே அந்தக்
கன்னிதான் அருளின் நீர்மை காட்டினாள்
போலுமன்றோ''

கச்சியப்பரின் கருணை நயமிகுந்த இந்தப் பாடல் எவ்வளவு அருள் விளக்கத்தைத் தருகின்றது!

குழந்தை வளர்ந்து விளையாடியது. அகில உலகங்களை - அண்ட சராசரங்களை - ஈ எறும்பு முதல் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களுடைய உயிர்களைப் பெற்றெடுக்கும் ஜகன்மாதா எப்படி விளையாடுகிறாள்? மூன்று ரத்தினங்களை அடுப் பாக்கி, முத்துச் சிப்பியை பாத்திரமாகச் செய்து, முத்துக்களை அரிசியாக்கி, நவரத்தினங்களைக் காய் கறிகளாக்கி, பொன் பொம்மைகளுக்கு ஊட்டு கிறாள். கச்சியப்பரின் கவிநயம் இவ்வாறு விளக்கு கிறது. பார்வதி தேவிக்கு ஐந்து வயதாகி விட்டது. மகள் தந்தையைப் பார்த்துச் சொல்லுகின்றாள், ''அப்பா! எனக்கு வயது ஐந்தாகி விட்டது. பொறி ஐந்து, புலன் ஐந்து, பூதம் ஐந்து, எழுத்து ஐந்து, இவை களுக்கு நாயகனாக விளங்கும் சிவபெருமானை நோக்கி, தவம்புரிய அனுமதி கொடுங்கள்'' என தேவி உரைத்தாள்.

''மகளே! உலக அதிசயமாக ஐந்து வயதில் தவம் செய்ய புறப்பட்டாய். ஐந்து வயதில் தவம் செய்ய இயலுமா? இந்தத் தவம் செய்யும் எண்ணத்தை சற்று மாற்றிக் கொள். ஏற்ற வயது இதுவல்ல,'' என் றான் பர்வத மகாராஜன்.

''அப்பா! உடல், உயிர், உள்ளம், உணர்வு எல்லாம் சிவபெருமான் கொடுத்ததே. ஐயன் எம்பிரானே என்னைக் காப்பாற்றுவார். தடை செய் யாமல், தவம் செய்வதற்கு விடை கொடுங்கள்,'' என்றாள். மகளின் மனப்படி தவச்சாலை அமைத்துக் கொடுத்தான் பர்வத ராஜன். காவலாகப் பல கன்னி யர்களை நியமித்தான்.

''சிவசிவ'' என்று மனம், மொழி, மெய்களால் வழிபாடு செய்தாள் குழந்தையாகிய ஞானசக்தி.

பார்வதி தவம் செய்து கொண்டிருந்த நேரத் தில் அசுரர்களின் தலைவன், சூரபன்மன் ஆயிரத் தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களாக அரசு செலுத்தி, தனக்கு நிகர் தானேயாக விளங்கி னான்; செருக்கடைந்தான். அசுரன் ஆட்சியில் தவசிரேஷ்டர்களின் உள்ளம் அமைதியில்லாமல் தவித்தது.

ஞானமே வடிவான எம்பெருமான் இன்ப மும், துன்பமும் இல்லாதவர். என்றைக்கும் ஒன்று போல் இருப்பவர் பரமேஸ்வரன். கயிலாய மலை யில், கல்லால மரத்தின்கீழ் தென்முகம் நோக்கி பரமசாந்தமாக தட்சிணாமூர்த்தியாக அமர்ந்திருந் தார். பிரம்மனுடைய நான்கு புத்திரர்களான சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமார் ஆகிய நால்வரும் வேதங்களைக் கற்றுக் கரை கண்டவர்கள். ஆகமங் களை அறிந்தவர்கள். புராணம், இதிகாசம், உப நிடதம் முதலிய பல்வேறு கலைகளும் நன்கு தெரிந்தவர்கள். ஆனாலும் மனதிற்கு சாந்தி கிடைக்க வில்லை. அவர்கள் நால்வரும் கயிலாய மலையை அணுகி, நந்தியம் பெருமானை வணங்கி, அவர் அனுமதியுடன் சிவசந்நிதிக்குச் சென்றனர்.

''மொழியது தவறல் செல்ல முற்றுடல்
பொடிப்புக் கொள்ள
விழிபுனல் பெருகத் தீசேர் மெழுகென உள்ளம்
விள்ள
அழகிய மறைக்கும் எட்டா ஆதிநாயகனை
நோக்கித்
தொழுதனர் உவகை பூத்துத் துள்ளினர்
துளக்கம் அற்றார்.''

கச்சியப்பரின் இந்தப் பாடல், சனாகாதி நால்வர் அருட்சிவனை கண்ட காட்சியை நன்கு விளக்கு கிறது.

சிவபெருமான் கருணை நிறைந்து, அன்பு முதிர்ந்து, அருள்நலங்கனிந்த வாக்கால், ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''அருட்பெரும் கடலே! ஆனந்த சிவமே! வேதங்கள் ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள் இவைகளை உணர்ந்ததனால், சந்தேகம் எழுகிறதே தவிர, மனச்சாந்தி ஏற்படவில்லை. எங்கள் மனம் அமைதி பெறுவதற்கு வழிகாட்ட வேண்டும்.'' என்று தொழுது வேண்டினர். பரமேஸ்வரன் புன்சிரிப்பு சிரித்து, நந்தியம் பெருமானை அழைத்து ''யார் வந்தாலும் உள்ளே விட வேண்டாம்'' எனக் கட்டளையிட்டார். சனகாதி நால்வருக்கு என்ன போதித்தார் என்பதை அடுத்த இதழில் காண்போம்.

*(தொடரும்)*

★★★

# ஐந்தெழுத்து மந்திரம்

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



ஐந்தெழுத்து மந்திரத்தை அன்றாடம் உச்சரித்தால்,
ஆனந்த மோனநிலை அடிஅடியாய் வந்துகூடும்,
அந்தரங்க ஆத்மாவும் ஐந்தெழுத்து மந்திரத்தில்,
அலை பாயும் மனமிருந்தும், அநுபோக அமைதிகாணும்.
ஐந்தெழுத்தை உச்சரிக்க ஐம்புலனில் நான்கினையும்,
அகக்கண்ணோ மந்திரத்தின் அப்பனையே கண்டுதொழும்:
மந்திரத்தின் ஞானஒலி மனமெல்லாம் எதிரொலித்தால்,
மனஅமைதி நிரம்பிவர மானுடலில் சக்திதோன்றும். (1)

நாதங்களில் 'நமசிவாய' நல்லபெரும் நாதமாகும்,
நாதரூபன் காணவேண்டில் 'நமசிவாய' ஒலிக்க வேண்டும்.
கீதங்களில் 'நமசிவாய' கேடில்லாக் கீதமாகும்,
கேசவனும் 'நமசிவாய' கீதம்கேட்க வந்திடுவான்;
சாதகத்தில் 'நமசிவாய' தலைசிறந்த சாதகமாம்,
தாண்டவத்தான் 'நமசிவாய' தாலாட்டில் ஆடிடுவான்;
பாதங்களில் 'நமசிவாய' பாதம்பெரும் சமயமார்க்கம்,
பரமசிவன் 'நமசிவாய' பாசுரத்தில் வாழ்ந்திருப்பான். (2)

'நமசிவாய' நாதத்தில் நாதனாட ஞாலம்ஆடும்;
ஞானப்பிர பஞ்சத்தில் நாதமோடு உயிர்கள் வாழும்;
''நம''பிறந்தால் நாபியிலே, ''சிவாய''பிறக்கும் செவ்வாயில்,
''நம முன்வந்தால் 'நமசிவாய', ''நம'பின்வந்தால் 'சிவாயநம',
அவனியிலே ''சிவம்''ஒன்றே அழியாத நடுப்பொருளாம்,
அதன்முன்பின் எதுவந்தும் அதன்நிலையோ மாறாதே;
சிவசத்திய சுந்தரத்தில், 'சிவம்' என்னும் நடுப்பொருளாம்;
சிவசக்தி சேர்ந்துவிட்டால் 'சிவாயநம' சிவமயமே. (3)

# கந்தர் அனுபூதி

**- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி**

அருணகிரிநாதர் இறைவனது பேரின்ப நிலையை அடைந்த பிறகு - பசு கரணம் மாறி பதிகரணம் ஆன பிறகு பாடிய பாட்டே திருவகுப்பு எனும் நூலாகும். கந்தரனுபூதியை அருணகிரியார், கிளியாயிருந்து பாடிய தற்கு எங்கும் குறிப்புகள் காணப்படவில்லை. மேலும் தான் மானுட தேகத் தில் இருக்கும் போதுதான் அனுபூதி பாடப் பெற்றது என்பதற்கு அவரது பாடலிலேயே ஆதாரம் உள்ளது.

''அடைக்கலப் பொருளாம் நாயெனை அழைத்து
முத்தியதாம் அனுபூதி என் அருட்திருப்புகழ் ஓதுக
வேல்மயில் அருள்வோனே''

எனக் கூறியதிலிருந்து அறியலாம். மேலும் பசுகர்ணம் மாறி பதிகர்ணங்களாக மாறிய பிறகு உலகின் சிற்றன்பவர்ணனைகளையும், வறுமையையும் குறித்து பாடவாய்ப்பே ஏற்பட்டிருக்காது. ஆனால் திருவகுப்பு பாடியிருக்கலாம் எனக் கொள்வதற்கு ஆதாரம் அவரது வாக்கிலிருந்தே அறிய முடிகிறது. மேலும் தாம் மானுட தேகத்திலிருக்கும் போதே, பாடிய பாடல்களில் இறவாத இன்ப அன்பை வேண்டி தனக்கு சுகச் சொரூபம் அருள வேண்டும் என முருகனிடம் விண்ணப்பித்துள்ளதைக் காண முடிகிறது (சுகம் = கிளி). திரு வகுப்பு பாட ஆசைப்பட்டதற்கு அன்னாரது ''நிந்தனையில் பத்தர் வெட்சிமலர் தூவும் நின் பதயுகப்பிரசித்தி என்பென வகுத்துரைக்க நின் பணி தமிழ் த்ரயத்தை அருள்வாயே'' எனும் பாடலே திருவகுப்பு பாட ஒரு எடுத்துக் காட்டாகும். திரு வகுப்பில் ஒன்றில்தான் சிற்றின்பவர்ணனையோ, உலக பந்த பாசங்களையோ சிறிதும் கலவாது, பேரின்பநிலையில் பாடப்பட்டுள்ளதை அறியலாம். திருவகுப்பில், வேளைக்காரன் வகுப்பில் ''உரை பெற வகுத்தருணை நகரினொரு பத்தனிடும் ஒளி வளர் திருப்புகழ் மதாணிக்கிருபாகரன்'' என படர்க்கை வினையில் பாடியுள்ளதையும் ''ஏழையின் இரட்டை வினையாயதோர் உடற் சிறையிராமல் விடுவித் தருள் நியாயக்காரனும்'' எனவும் கூறியதிலிருந்தே அறியமுடிகிறது. ஒருவேளை இறைவனுடைய திருக் கரத்தில் இருந்து அனுபூதி பாடினார் என்று நம்பு கின்றவர்களும் இருக்கலாம். ஆகவே அதை மேலும் ஆராயாது, அவர் பாடிய ஏனைய பாடல்களைக் காட்டிலும் திருவகுப்பு ஞானமணம் நிரம்பியதாக, இறைவனது செறிவை மிகமிக நன்றாக விளக்குவதாக இருக்கிறது என்பதை மாத்திரம் நாம் அறிந்துக் கொண்டாலே போதும். மானுட தேகத்திலிருந்தே பாடிய பாடல்களாகிய திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி போல கந்தரனுபூதியும் பாடி இருக்க வேண்டும். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்ற பழமொழி ஒன்று உண்டு. அருணகிரியாகிய கிளிக்கு தன்னிச்சையாக பேசத் தெரியாது. சொன்ன தைத்தான் சொல்லும் கிளிப்பிள்ளை எனும் முது மொழிக்கேற்ப, முருகன் சொன்ன தைத்தான் திருப்பி சொன்னது என்று கருதினால், கந்தரனுபூதியில் வரும் பாடல்களில் சிற்றின்பத்தைப் பற்றிய பாடல்கள் முருகன் கிளிக்கு சொல்லி அதையே கிளி பாடியது எனக் கருதுவது சிறிதும் பொருந்தாது. கிளியாயிருந்து பாடின பாடல்கள் திருவகுப்பு எனக் கொள்ளலாம். முன்னம் அவர் பாடிய பாடல்களில் மனித உள்ளம் இருக்கும். ஆனால் திருவகுப்பில் இறைவனே உள்ளத்தில் இருந்து நம்மை பாட வைத்தால் எவ் வாறு இருக்குமோ அதே போன்று அரிய தத்துவங் கள் எல்லாம் திருவகுப்பில் நிரம்ப இருப்பதை காணலாம். மழையின் காரணத்தால் காட்டாறுகள் பெருக்கெடுத்து ஓடும். சில நேரம் கழித்து வற்றி விடும். அதே போன்று சில பாடல்கள் நம் நாட்டில் எங்கும் முழங்கும், பின்னர் அவை இருந்த அடிச்சுவடுகள் கூட இல்லாமல் மறைந்து விடும். ஆனால் அனுபூதி மான்களில் அருணகிரியார் சிறந்து விளங்கி இறை அருளால் பாடி அருளிய ஞான பாடல்களாகிய கந்தரனுபூதி போன்ற செந்தமிழ் வெள்ளம் - கங்கை வெள்ளம் போல் என்றும் அழிவின்றி பொலி வோடு விளங்குவதை இன்றும் காணலாம்.

கந்தரனுபூதியில் அருணகிரியார் தம் அனுப வத்தை நிரம்பவும் தெளிவாகவும் பாடியுள்ளதை கவனிக்கலாம். மெய்ப்பொருள் பற்றி நாலு பாடல் களில் கூறியுள்ளதை கவனிக்க வேண்டும். பாடல் எண்கள் 8,11,20,45; மனத்தை விளித்து அறிவுரைகள் 3 பாடல்களில் கூறியுள்ளதைக் கவனிக்கலாம். பாடல் 7,14,37 இந்த மூன்று பாடல்களும் பிறவி பிணிக்கு அரிய மருந்தாகும். இந்த 3 பாடல்களுக்கும் ஒரு முத்திரை வைத்ததுபோல் வாய் என்ற பதத்தை அல்லது பாடியுள்ளது பெருமைக்குரியது. கந்த ரனுபூதியில் சிந்தனைக்குரிய பல அற்புத கருத்துக்கள்

இடம் பெற்றுள்ளன. அவற்றைக் காணுவது அவசியம்.

தாம் அவதரித்த திருவருணைத் தலத்தைப் பற்றியோ, அன்னாருக்கு திருப்புகழ் பாட வயலூர் பிள்ளையார் அனுக்கிரகித்ததை பற்றியோ, முருகனே அருணகிரியாருக்கு திருவாவினன்குடியில் ஜப மாலை தந்தருளியதைப் பற்றியோ, அன்னாரால் போற்றப்பட்ட முருகனது 6 திருப்பதிகளைப் பற்றியோ கந்தரனுபூதியில் எங்கும் குறித்து பாடாத போதிலும் நாகாசலம் எனும் திருச்செங்கோட்டை மட்டும் குறித்து பாடியுள்ளதின் உட்கருத்து விந்தைக்கு உரிய தாக இருக்கிறது.

இனி திருமால் மருகன் என மிக அழகாக வும் பெருமையாகவும் திருப்புகழிலும் கந்தரலங் காரத்திலும் திருவகுப்பிலும் பல இடங்களில் இனிக்க இனிக்க நாராயணனுடைய பெருமைகளை பாடி யிருந்த போதிலும் கூட அனுபூதியில் திருமாலைப் பற்றி ஒரு பாடலில் கூடப் பாடியதாக காணவில்லை. இதனையும் சிந்தனைக்குரிய கருத்தாக கொள்ள வேண் டும். குமரகுருபரனாகிய குகனை குருமூர்த்தமாகக் கொண்டலன்றி உண்மைப் பொருளை உணரமுடி யாது என்று 13ஆவது பாடலாகிய ''முருகன் குமரன் குகன் என்று மொழிந்து உருகும் செயல் தந்து உணர் வென்றருள்வாய்'' என திட்டவட்டமாகவும் தெளி வாகவும் உணர்த்தி விட்டார். இப்பாடலைத்தான் ஞானியார் சுவாமிகளும் தினமும் காலையில் எழுந்த தும் ஓதுவதை வழக்கமாக கொண்டிருந்தார்.

''நெஞ்சக்கனகல்லு'' எனப் பாடியுள்ளதை நோக்கின், நெஞ்சத்தை கனத்த கல்லுக்கு ஒப்பிடு வர். இக்கல் நெகிழ வேண்டுமானால், இறைவன் திருவருள் வேண்டும். இதைக் குறித்து வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய வாட்போக்கி கலம்பகத்தில்,'' தழுவுமையின், முன்னும், தமிழிறை யால் பின்னும், தொழும் இறையால் மேலும் சுவடு எழும்; கீழ் எனும் குறைபோம் என் மனஞ்சேர் அமர்ந்தாய் அடி என்றால்'' இதன் கருத்து இறைவா! உமையைத் தழுவினதால் உடலின் முன்புறம் உனக்கு தழும்பு ஏற்பட்டது. பாண்டிய அரசன் பிரம்பு கொண்டு உன் முதுகில் அடித்ததால் உன் பின் புறத்தி லும் தழும்பு ஏற்பட்டது. அருச்சுனன் வில் கொண்டு உன் தலையில் அடித்ததால் உன் தலை மேலே ஒரு தழும்பு ஏற்பட்டது. உன் கீழ்புறத்தில் தழும்பில்லை எனும் குறை நீங்கி விடும், நீ என் மனமெனும் கல் லின் மீது வீற்றிருப்பாயானால் என்பதாகும். இதே கருத்தினை அருணகிரியாரும் கந்தரனுபூதியில் ''திணி யானமனோசிலை மீது உனது தாள் அணியார் அர விந்தம் அரும்புமதோ'' என பாடியுள்ளது கவனிக் கற்பாலது. உலக மக்கள் யாவரும் பயனடையவே, சமரச நோக்குடன் பாடியதாகவே கருதுதல் வேண்டும். கந்தரனுபூதி பாடல்கள் அனைத்தும் சிந்தனைக்கும், வந்தனைக்கும் உரிய மந்திர நூலாகும் என்பதில் சந்தேகமேயில்லை. இந்தப் பாடல்கள் மட்டுமின்றி கந்தரனுபூதி எல்லா ப்பாடல்களுமே அருணகிரி நாதர் தன் சுய நல நோக்கத்தின் அடிப்படையில் தன் மனத்தை நோக்கித்தான் அறிவுரை கூறிப் பாடினார் எனக் கொள்ளலாகாது.

கந்தரனுபூதி பாடல்களை முழுவதும் ஆராய் வதை விட ஒரு சில பாடல்களை ஆராய்வதே போதுமானதாகும்.

முதல் பாடல்

''ஆடும்பரி வேல் அணிசேவல் என
பாடும் பணியே பணியாய்அருள்வாய்
தேடும் கயமாகமுகனைச் செருவில்
சாடும் தனியானைச் சகோதரனே...''

என்பதாகும்.

இதன் கருத்தைச் சிறிது ஆராய்வோம்.

இதில் மயிலுக்கும் சேவலுக்கும் அடை மொழிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வேலுக்கு எந்தவித அடைமொழியும் கொடுக்கப்படவில்லை. பொது வாக நாட்டில் எல்லோராலும் அரசியலில் பாராட்டப்படும் மகாத்மா காந்தி, உயர்பதவி வகித்த நேருஜீ போன்றோர்கள் வானொலியிலோ தொலைக்காட்சிகளிலோ பத்திரிகைகளிலோசொற் பொழிவாற்றும் நேரத்தில் இவர்களுக்கு எந்த அடை மொழியும் தராது எடுத்த எடுப்பிலேயே வெறுமனே அவர்களது பெயரையே நேர்முகமாக அறிவிப்பதை காணலாம். காரணம் இவர்களை போன்றவர்கள் பெயருக்குமுன் வழங்கும் அடை மொழிக்கு அப்பாற் பட்டவர்கள் என நினைப்பதே காரணம். மக்கள் இவர்களுக்கும் ஏனைய தலை வர்களுக்கு கொடுக்கும் அந்தஸ்தை கொடுப்பார் களேயானால் வித்தியாச மின்றிபோகும். அருணகிரியார் 600 ஆண்டுகளுக்கு முன்னரே இதனை நடைமுறையில் செய்து காட்டின ராவார். தரத்தில் குறைந்த மயிலுக்கும் சேவலுக்கும்

மட்டும் அடைமொழி தந்து, ஞான சக்தியாகிய வேலுக்கு அடைமொழி தராமலே தரத்தின் உயர்வினை உணர்த்தி பாடியுள்ளார். அப்படி வேலுக்கும் அடைமொழி கொடுத்து பாடியிருந்தால் மற்ற இரண்டோடு இதனையும் ஒப்புவிப்பதாகிவிடும்.

உதாரணத்திற்கு திருத்தலம், திருக்கோயில் திருக்குளம் திருவாயில் திருஅலகு என்று கூறின போதிலும் அவற்றிற்கு நாயகராகிய மூலப்பொருளுக்கு அடைமொழி தந்து திருவினாயகர், திருக்கபாலீஸ்வரர், திருசுப்ரமணியர், திருமதி கற்பகவல்லி என அழையாது நேர்முகமாக வெறும் இறைவனின் திருநாமத்தை அறிவிப்பது போன்று கொள்ளுதல் வேண்டும். பரம்பொருளுக்கு அடைமொழியே தேவையில்லை, இறை அன்பின் ஈடுபாட்டினால் பெருமை குறைந்தவர்களுக்குத்தான் தங்கள் பெயர்களுக்கு முன்னும் பின்னும் அடைமொழிகள் தேவைப்படும். உதாரணம் சம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆண்டாள் காரைக்கால் அம்மையார் போன்றவர்கள் பெயர்களுக்கு முன் திரு அல்லது திருமதி என்று கூறுவது இல்லை.



வேலைப்பற்றி தாம் பாடிய அனுபூதி 51 பாடல்களில் 25 பாடல்களில் வேலின் சிறப்பு வெளிப்படையாக பாடப்பட்டுள்ளது. திருப்புகழிலும் ''மந்திரவேல்'' என்றே கூறியுள்ளதால் அத்தகைய வேலின் சிறப்புப் பற்றி நிரம்ப பாடியதிலிருந்தே கந்தரனுபூதி ஒரு மந்திர நூல் என வழங்குவதில் தவறு ஒன்றும் இல்லை.

மற்றொரு கருத்து ''வேலம் மயிலும் துணை'' எனும் திருமந்திரம் சைவமக்கள் யாவர்க்கும் மறைப்பொருளாயிருக்கின்றது. சேவல் எனும் சொல்லுக்கு துணை, காவல் எனப் பொருள் உண்டு. கந்தர்-அந்தாதி பாடல் 15ல் ''திவாகரகன்ன'' எனத் தொடங்கும் பாடலில் ''மறலியிடாது உயிர்ச் சேவலுக்கே'' என பாடியுள்ளதை கவனிக்கலாம். ஆகையினால் இப்பாடலில் அணி சேவல் என்பதற்கு ஒப்பற்ற துணை எனப் பொருள் கொள்ளவும் இடமளிக்கிறது. இதனால் ஆடும்பரி வேல் ஒப்பற்ற துணை என்று, அதாவது வேலும் மயிலும் துணை என பாடும் பணியே பணியா அருள்வாய் எனவும் பொருள் கொள்ள இடமளிக்கிறது.

அடுத்து ஒரு பாடல் (3)

''வானோபுனல் பார்கனல்
மாருதமோ
ஞானோதயமோ நவில்
நான் மறையோ
யானோமனமோ எனை
யாண்ட விடந்
தானோ பொருளாவது
சண்முகனே''

இப்பாடலின் பஞ்ச பூதங்களையும் முதல் சீரில் கூறிவிட்டு ''ஞானோதயமோ'' என கூறியுள்ளது. ஆராயற்பாலது. எம்பெருமானின் திருவுருவம் முழுவதும் ஞானம்; அவன் ஞானச்சொரூபன் என்று பண்டைய பாடல்கள் கூறுகின்றது. திருப்புகழிலும் ''ஞானங் கொள் பொறிகள் கூடி'' என்றும் மற்றோர் பாடலில் ''சிவஞான முதேபசியாறி'' என்றும் மணிவாசகப் பெருமானால் மேலும் விரிவாக இதைப்பற்றி பாடியுள்ளதைக் கவனிக்கலாம். அத் தகைய ஞானம் மட்டும் இறைவனிடம் இருந்தால் போதாது. அந்த ஞானம் உலகத்துக்கு பயன்படவேண்டுமானால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி எனப் பாடியுள்ள தற்கேற்ப அவனருளும் வேண்டும்.

(தொடரும்)

**அன்பே சிவம்**

# தட்சிணாமூர்த்தி திருவருட்பா - விரிவுரை

- பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A. D.Litt., Ph.D.

**2. மும்மலப் பேய்களின் போராட்டம்**

சீராரும் நின் தேஜோமயானந்த
தெரிசனங் காட்டு பகலே
தேகாதியாகும் ப்ரபஞ்ச இருளாகியே
திண்டாடும் மும்மலப் பேய்
போராடுது என்னுடன், நான் ஏழை, அதனுடன்
போராட முடிவதில்லை.
புலையாடல் ஒருநாள் இரண்டுநாளோ? இது
பொறுக்கவும் படுவதில்லை.
ஆரோடு சொல்லி என் குறையாறுவேன்? எனக்கு
அன்னையே! அப்பனே! உன்
ஆறுதலையன்றி வேறில்லை. நீ நழுவவிடில்
அடியேன் அலைந்து போவேன்
ஓராலின் நீழலில் உறைந்து சனகாதியர்க்கு
உள்ள படி அருள் தெய்வமே!
ஒன்றாகி ஆனந்த உருவாகி என் உயிர்க்கு
உயிரான பரமசிவமே!

அம்பிகை பார்வதியாகித் தவமியற்றிக் கொண்டிருந்த அதே நேரத்தில் ஈசன் சனகாதி முனிவருக்கு உபதேசம் செய்யத் திருவுள்ளம் கொண்டான்.

சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர் என்று நான்கு முனிவர்களும் வேதம், ஆகமம், புராணம் முதலான அனைத்தையும் கசடறக் கற்றவர்கள். வயதாலும், அனுபவத்தாலும் முதிர்ந்தவர்கள். எனினும், அவர்களுக்கு மெய்ப்பொருள் எதுவென்ற ஞானத் தெளிவு ஏற்படவில்லை. அதனை உணர்ந்து ஒப்புக்கொண்டதே அவர்களின் அறிவு முதிர்ச்சியைக் காட்டுகிறது. அவர்களைச் சனகர் முதலான முனிவர்கள் என்ற பொருளில் 'சனகாதியர்' என்பர்.

கயிலை மலைச் சாரலில் உள்ள ஓர் ஆல மரத்தின் கீழ் அமர்ந்து ஈசன் சனகாதியர்க்குச் சின் முத்திரை காட்டி உபதேசித்தான். ''எல்லாமாய், அல்லதுமாய் இருந்ததனை சொல்லாமற் சொன்னான்'' என்கிறார் பரஞ்ஜோதியார்.

ஆலமரம் எல்லா மரங்களிலும் பெரியது. அதன் விதையோ மிகச்சிறியது. அணுவாகவும், 'மகத்' என்னும் மிகப் பெரிய வடிவாகவும் இறைவன் விளங்குகிறான். சிறு ஆலம் விதையுள் மாபெரும் மரம் அடங்கியிருக்கிறது. அதுபோல் இறைவன் தன்னை அடக்கி வைத்துள்ளான்.

வாமனாவதாரத்தைக் கூற வந்த கவிச்சக்கரவர்த்தி கம்பர் ''ஆலமர் வித்தின் அருங்குறள் ஆயினன்'' என்றார்.

ஆலமரத்துக்கு அடியில் வேர் உள்ளது. மேலேயும் வேர் விழுதாகத் தோன்றிப் படர்ந்து விரிகிறது. ''வேரிலிருந்து மரம், மரத்திலிருந்து வேர்'' என்ற சுழற்சி உலகத் தோற்றம், இயக்கம், ஒடுக்கம் என்ற சுழற்சியை இறைவன் நடத்துகிறான். ஆகவேதான், அவன் ஆலமரத்தைத் தன் உபதேசத்துக்கு உகந்த இடமாகத் தேர்ந்தெடுத்தான். திருமால் பிரளய வெள்ளத்தில் ஆலிலைமேல் பள்ளி கொள்கிறார். அதன் உட்கருத்தும் இதுவே.

கயிலையில் இருப்பதாலும், ஈசன் அதன் நிழலில் உபதேசிக்க அமர்ந்ததாலும், அதுவே பல உபதேசச் செய்திகளை உணர்த்துவதாலும் அதனை ''ஓர் ஆல்'' என்று சிறப்பித்தார் சிவஞான தேசிகர் 'ஓர்' என்பது சிறப்பு மிக்க அல்லது 'ஒப்பற்ற' என்ற பொருளில் வந்தது.

இரண்டாவது பாடலின் ஈற்றடியின் முதற் பகுதி இறைவனை ''ஓர் ஆலின் நிழலில் அமர்ந்து சனகாதியர்க்கு அருள் தெய்வமே!'' என அழைக்கிறது.

அறியாமை போன்ற பல காரணங்களால் உலகியல் வாழ்க்கை காரிருளாய்க் கவ்வி நிற்கிறது. இருளே அச்சம் தருவது. அதில் பேய்கள் வேறு வந்து அச்சத்தை அதிகமாக்குகின்றன. ''உன்னை விட மாட்டோம். எங்களிடமிருந்து தப்பமுடியாது. எங்கள் தாக்குதல்களுக்கு நீ ஆளாகியே தீர வேண்டும்.'' என்று விடாப்பிடியாய் போராட்டமே நடத்துகின்றன. ''என்னால் அவற்றுடன் போராட முடியவில்லை. நான் மிகவும் எளியவன் வலுவற்றவன். காரிருளில் அந்தப் பேய்களின் போராட்டம் ஒரு நாளா? இரண்டு நாளா? என்றும் தொடர்கதையாகவுள்ளது. இந்தப் போராட்டம் ஒரு புலையாடல். அதாவது இறந்தவர்களின் உடல்களைத் தின்னும்

பேய்ச் சக்திகளின் போராட்டம். இந்த உடலில் (தேகத்தில்) உயிர் குடிகொண்டிருப்பதால் எனக்கு இந்த வேதனைகள்.''

''தேகாதியாகும் ப்ரபஞ்ச இருளாகியே
திண்டாடும் மும்மலப் பேய்
போராடுது என்னுடன் நான் ஏழை, அதனுடன்
போராட முடிவதில்லை.
புலையாடல் ஒரு நாள் இரண்டு நாளோ? இது
பொறுக்கவும் படுவதில்லை.''

என்று மும்மலத்தால் விளையும் கொடுமையை எடுத்துரைக்கிறார். இதனையே இலலிதா சகஸ்ர நாமம் 'தாபத்ரய அக்னி' (மும்மல நெருப்பு) என்கிறது.

''ஈசனே! இதனை யான் யாரிடம் கூறி ஆறுதல் பெற முடியும்? நீதானே என் அன்னையும் அத்தனும்! நீயும் என்னைக் கைவிட்டால் நான் இடர்க் கடலில் மூழ்கிடுவேன்.''

''உன் ஆறுதலை யன்றி வேறில்லை. நீ நழுவவிடில்
அடியேன் அலைந்து போவேன்.''

சேதுபந்தனம் என்னும் அணைகட்டும் பணியில் வானர வீரர்கள் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் கற்களைத் தூக்கி வந்து அவற்றில் இராமநாமத்தை எழுதிக் கடலில் போட்டனர். அப்பெரிய கற்கள் அனைத்தும், கடலில் மிதந்தன. அதனைக் கண்டு இராமர் அதிசயித்தார். தானும் ஒரு கல்லை எடுத்துக் கடலில் போட்டார். ஆனால், அது கடலில் மூழ்கிவிட்டது! ''நான் போட்ட கல் மட்டும் ஏன் மூழ்கிவிட்டது?'' என்றார் இராமர்.

அருகில் நின்ற அனுமார் ''ஐயனே! எங்களைக் காப்பாற்றக் கடமைப்பட்ட தாங்களே கைவிட்டால் நாங்கள் மூழ்கத்தானே வேண்டும்'' என்றார்.

அதே கருத்தை சுவாமிகள் இங்கு ''நீ நழுவவிடில் அடியேன் அலைந்து போவேன்'' என்ற சொற்றொடரால் உரைக்கிறார்.

''ஆறுதலையர் அருள் செய் ஆறுதலையான்! எனக்கு ஆறுதலையார்?'' என்று வினவுகிறது சுவாமிமலை நவரத்தின மாலை. இங்கும் ''உன் ஆறுதலை யன்றி வேறில்லை'' என்கிறார்.

இவ்விரு நூல்களிலும் 'ஆறுதல்' என்ற சொல் 'ஆறுதல்' என்ற பொருளைத் தருகிறது.

''சங்கரர்க்கும் ஆறுதலை....'' என்ற காளமேகப் புலவரின் பாடலிலும் 'ஆறுதல்' என்ற சொல் 'அறுதல்' என்ற பொருளைத் தருகிறது.

மும்மலப் பேய்களின் போராட்டத்திலிருந்து விடுவித்து, நமக்கு எதுதான் ஆறுதல் அளிக்கும்? அதனை இப்பாடலின் தொடக்கத்திலேயே விண்ணப்பமாக வைக்கிறார்.

''சீரார்ரும் நின் தேஜோமயமானந்த தரிசனங் காட்டு பகலே!''

''ஒளிமயமான, இன்பமயமான உன் தரிசனத்தைக் காட்டினால் என் இடர்கள் யாவும் நீங்கிவிடும்'' என உரைக்கிறார்.

''திவ்ய தேஜோமயானந்த பரிபூரண தேவ சிவகுருவே'' என்ற இடத்தில் சுவாமிமலை நவரத்தின மாலையும் முருகனை 'தேஜோமயானந்தன்' என்று குறிப்பிடுகிறது.

'தேஜஸ்' அல்லது 'தேசு' என்றால் 'முகக்களை' என்றும் 'முகப் பொலிவு' என்றும் பொருள் தரும்.

நலிவுள்ள நமக்குப் பொலிவுள்ள முகத்தைப் பார்த்தால்தான் ஆறுதல் கிட்டும்.

அத்தகைய தரிசனத்தை இனியும் காலம் தாழ்த்தாது உடனே விரைவாகக் காட்டியருள வேண்டும் என்று வலியுறுத்தி வேண்டுகிறார். ஆகவே ''தரிசனங் காட்டு பகலே'' என்றார். 'பகலே' என்பது இங்கு உரிய நேரத்தில் அல்லது தக்க தருணத்தில் என்ற பொருளில் வந்தது.

சுவாமிமலை நவரத்தின் மாலையும் ''கடாட்சமது செய்ய இது சமயம், நல்ல சமய மையா!'' என்று உரைக்கிறது.

குருநாதனாம் தட்சிணாமூர்த்தியின் புகழ் பாடும் இத்திருவருட்பாவும், பரம குருநாதனாம் முருகனின் சிறப்பினை உரைக்கும் நவரத்தின் மாலையும் பல கருத்துகளிலும், சொல்லாட்சியிலும் ஒத்திருக்கின்றன.

ஈசனும் முருகனும் ஒருவர்தானே! அதனால் தான் இந்த ஒற்றுமை போலும்!

(தொடரும்)

★★★

# சண்டேசுர நாயனார்

**- எம். சிவப்பிரகாசம்**

பரந்த நம் இந்தியத் துணைக்கண்டத்தில் பல திறப்பட்ட துறைகளிலும் வரலாறு முழுமையாகப் பேணப்படவில்லை என்ற ஓர் குறையுண்டு. ஆனால் நம் தமிழ் நாட்டில் அவதரித்து ஆன்மீகத் துறையில் நமக்கெல்லாம் வழிகாட்டிகளாகத் திகழ்ந்து மறைந்தும் - இன்னும் நமக்கொல்லாம் ஒளி விளக்காய்த் திகழ்ந்து வரும் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளை எளிமையும் இனிமையும் பக்தி சுவையுடன் குழைத்து நமக்கு அளித்திருப்பவர் தெய்வச் சேக்கிழார் என்பதை மறக்கவோ மறுக்கவோ இயலாது.

ஆம். திருத்தொண்டர்புராணம் என்னும் பெரியபுராணத்தினை பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடி தமிழுலகுக்கும் சைவ உலகுக்கும் மிகப்பெரிய சேவை ஆற்றியுள்ளார். தொண்டர் தம் வரலாறு பேசப்படுவதால் திருத்தொண்டர் புராணம் எனவும், சிவனடியார்களின் செயற்கரிய பெருமையெல்லாம் விரித்துக் கூறும் காரணத்தால் பெரியபுராணம் எனவும் போற்றப்படுவதாயிற்று.

பரந்து கிடந்த அக்காலத்து நம் தமிழ் நாட்டில் சேரி, சிற்றூர், பேரூர் தலைநகரம் போன்ற பல்வேறு இடங்களில் பல்வேறு காலகட்டத்தில் வாழ்ந்த இந்த அறுபத்து மூன்று நாயனார்கள் பற்றிய செய்தியினை முதன் முதலாகத் தாம் இயற்றிய ''திருத்தொண்டத்தொகை'' வாயிலாகத் தமிழுக்கு அளித்தவர் தம்பிரான் தோழர் என்ற சிறப்புக்குரிய சுந்தரமூர்த்தி நாயனாராவர். திருத்தொண்டத் தொகையினை ஆதாரமாகக் கொண்டு சற்றே விரிவுடன் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி என்பார் திருத்தொண்டர் திருவந்தாதியினை சைவ உலகுக்கு அளித்துள்ளார்.

இந்த இரண்டு நூல்களில் கூறப்பட்ட செய்திகளை அடிப்படையாகக்கொண்டு சோழன் அனபாயன் வேண்டுகோட்கிணங்க தெய்வச் சேக்கிழார் தில்லையம்பலவன் ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுக்க 4286 செய்யுள்களில் இந்த அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறுகளை பக்திச் சுவையுடன் நமக்கருளியுள்ளார்.

பெரியவர்களின் வரலாறுகளைக் கூறத் துவங்கு முன் அவர்கள் அவதரித்த ஊரின் பெயர், நதி, மலை, நீர், நிலவளம் இவற்றைக் கூறுவது தொன்று தொட்டுவரும் மரபாகும். அவ்வூரை அணி செய்யும் ஆற்றின் பெருமையைக் கூறத் தவற மாட்டார்கள்.

இப்பொழுதெல்லாம் நாம் அனைவரும் நீரின் அருமையையும் பெருமையையும் நன் குணர்ந்து வருகிறோம். நீர் இல்லையெனின் உலகமும் இல்லை என்பதையே ''நீர் இன்று அமையாது உலகு'' என்பார் பொய்யமொழி.

என் சிறுவயது ஞாபகம் ஒன்றை இங்கே பகிர்ந்து கொள்வதில் தவறில்லை என்று எண்ணுகிறேன். சற்றேறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன் எங்கள் கிராமம் திருமருகலில் புதுவெள்ளம் வரும் போது மக்களிடையே ஒரு பரபரப்பைக் காணலாம். அவர்கள் உரையாடலில் ''காலை 6 மணிக்கு நன்னிலத்தில் கொழுந்து (புதிதாக ஓடி வரும் நீரின் முதற்கூறு) பார்த்தார்கள். 12 மணிக்குத் திருப்புகலூருக்கு வந்து விட்டதாம். மாலை 4 மணிக்குள் நம் ஊருக்கு வந்து விடலாம்'' என்பன போன்றவை இடம்பெறும். நீரின் அருமையை உணர்ந்தவர்கள் - எதிர் பார்த்துக் காத்திருப்பவர்கள் 4 மணிக்கு சற்று முன்னேயே கூட்டமாக ஆற்றுப் படுகையில் எதிர்பார்த்த வண்ணம் நின்றிருப்பார்கள். புது வெள்ளத்தின் கொழுந்து வந்தவுடன் ஆற்று மணலில் விழுந்து வணங்குவார்கள். புதிய நீரை இருகைகளாலும் அள்ளி எடுத்துத் தலையில் தரித்துக் கொள்வார்கள். ஆண்டுதோறும் இப்புதிய வெள்ளம் இல்லையென்றால் பொன்னேர் ஏது? பொங்கல்தான் எங்கே? இவ்வழிபாடு இன்றும் தொடர்ந்து நடைபெறும், நடை பெற வேண்டுமென்று எண்ணுகிறேன்.

**சண்டேசுரர்**

சேக்கிழார் பெருமானும் சண்டேசுரர் அவதரித்த சேய்ஞலூர் பற்றிக் கூறத்துவங்கு முன் 'பூந்தண் பொன்னியின்' கிளையாகிய மண்ணியாற்றின் சிறப்பினைக் கூறத் தவறவில்லை. காவிரியின் கிளைகளனைத்தையுமே காவிரியாகவே வணங்கி வழிபாடு செய்வது பொன்னி நாட்டின் மக்கள் பண்பாடாகும்.

இந்த மண்ணியாற்றின் தென் கரையில் அமைந்ததுதான் சேய்ஞலூர் என்று பாராட்டப்படும் சிறப்புடைத் தலமாகும். சேய்-முருகன் எழுந்தருளி ஆட்சி புரிவதால் சேய் நல்லூர் என்று வழங்கப் பெற்று மருவி சேய்ஞலூர் ஆயிற்றென்பர். மறைய வர்கள் நிறைந்த ஊர். ஐம்புலன்களையும் அடக்கி ஆண்டு சைவம் கமழத் திகழ்ந்தவர்கள்.

அப்பகுதியில் மறையவர் குலத்தில் தோன்றிய எச்சதத்தன் என்பார் செல்வ மிக்கவருள் ஒருவர். மனையாளின் பெயர் பவித்திரை. சுற்றம் பேணி வாழ்ந்து வந்த அத்தம்பதியர்க்கு அவர்தம் குலம் விளங்க விசாரசர்மர் என்றோர் மகவு பிறந்தது. இம் மகவே இறைவனால் சண்டேசுரப் பதம் அளிக்கப் பெற்று சண்டேசுரர் என்ற சிறப்புப் பெயருக் குடையவராய் விளங்கினார்.

சிவாலயங்களில் நாம் வலம் வரும்போது மூலவரின் இடப்பக்கச் சுற்றில் அறுபத்து மூவர் திரு வுருவங்களைக் காணலாம். இவ்வறுபத்து மூவருள் சண்டேசுரரும் ஒருவர். ஆனால் மூலவரின் வடக்குச் சுற்றின் கீழ்க் கோடியில் இச்சண்டேசுரர் தனிக் கோவில் கொண்டிருப்பதையும் காணலாம். அது மட்டுமன்றி பஞ்சமூர்த்திகள் புறப்பாட்டிலும் பஞ்ச மூர்த்திகளின் தேர்களிலும் சண்டேசுரர்க்கு என்று ஒரு தனிப்படிச் சட்டம், தனித்தேர் அமைந்திருப்ப தையும் காணலாம். இப்படி எல்லாம் பெருமை யுடன் பேசப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வரும் சண்டேசுரர் பற்றிய வரலாற்றினை தெய்வச் சேக் கிழார் மிக அருமையாக பெரியபுராணத்தில் வடித் துள்ளார்.

விசார சர்மர் (இனி சண்டேசுரர் என்றே அழைப்போம்) தம் ஐந்தாவது பிராயத்தில் கல்வி பயிலத் துவங்கினார். ஆயினும் முந்திய பிறவியின் தொடர்ச்சி காரணமாக கலைகளனைத்தையும் மிகவும் தெளிவாகவும் சிறப்பாகவும் கற்றார். கல்வி யின் பயனும் எல்லையும் ஆடும் கழலே'' எனத் தெள்ளிதின் உணர்ந்தவர் அத் திருவடிகளிலேயே திளைத்துக் கனிந்தார்.

கல்வி கேள்விகளிலும் சிவானுபவத்திலும் ஒருங்கே சிறந்து விளங்கிய சண்டேசுரர் ஒரு நாள் வீதியில் செல்லும்போது மேய்ப்பான் ஒருவன் ஊரில் உள்ளவர்களின் பசுக்களை மேய்ப்பதற்காக ஓட்டிச் செல்வதைக் கண்டார். அண்மையில் கன்றை ஈன்ற பசுவொன்று கன்றைப் பிரிய மனமின்றி மேய்ச்சல் நிலம் செல்ல விருப்பமின்றித் தொழுவத் திற்குத் திரும்பிச் செல்ல முனைந்ததைக் கண்ட மேய்ப் பான் அதனைத் தடிகொண்டு துன்புறுத்தி மேய்ச்சல் நிலம் நோக்கி செலுத்த முற்பட்டதைச் சண்டேசுரர் கண்ணுற்றார். மேய்ப்பானைச் சினத்துடன் நோக்கி னார். ''பசுக்களின் பெருமையறியாதவன் நீ! இனி இப்பசுக்களை நீ மேய்க்க வேண்டியதில்லை. நானே மேய்ப்பன்'' எனக் கூற அஞ்சிய அம்மேய்ப்பன் அகன்று சென்று விட்டான்.

அன்று முதல் சண்டேசுரர் தாமே ஊர்ப்பசுக் களை எல்லாம் மேய்க்கத் தொடங்கிவிட்டார். புல் நிறைய இருக்கும் இடங்களைத் தேடி பசுக்களை அங்கே மேயவிட்டு மணிணியாற்றில் நீர் பருகச் செய்து நிழல் நிறைந்த இடம்கண்டு படுத்து ஓய் வெடுக்கச் செய்து மாலை நேரத்தில் அப்பசுக்களை அவரவர்கள் வீடுகளில் சேர்த்து விடுவதை வழக்க மாகக் கொண்டார்.

மாலையில் வீடு திரும்பும்போது தீ வளர்க்க உதவும் சமிதையும் விறகும் சுமந்து வருவார் என்று கூறுகிறார் சேக்கிழார். அந்தணர் குலத்தில் பிறந்து மாடு மேய்க்கும் வழக்கத்தை மேற்கொண்டபோதிலும் அன்றாடம் தீ வளர்த்து நித்திய வழிபாட்டில் தவறா திருந்தார் என்பதை உணர்த்துகின்றார் சேக்கிழார்.

நாட்கள் பல சென்றன. சண்டேசுரரின் பாது காப்பில் பசுக்கள் மகிழ்ந்தன. வழக்கத்திற்குமேல் பாலைப் பொழியத் தொடங்கின.

தம் கன்றுகளுக்குஅன்றியும் மேய்ச்சல் நிலத் திலும் பால் சுரந்து வெளிப்படும் நிலை. இதனைக் கண்ட சண்டேசுரருக்கு இப்பாலை வீணாக்காமல் கறந்து இறைவனுக்குப் படைக்கலாமே என்ற எண்ணம் மேலோங்கியது.

ஒரு மர நிழலில் மண்ணாலான சிவலிங்கம் ஒன்றைப் படைப்பித்தார். சுற்றுச்சுவரும் கோபுரமும் கூட மண்ணாலே எழுப்பப்பட்டன. பக்கத்தில் வளர்ந்திருந்த செடி கொடிகளினின்றும் மலர்களைக் கொய்து இறைவனுக்கு அணி செய்தார். புதிய பானை ஒன்றைக் கொணர்ந்து பசுக்களின் அருகில் வைத் தார். அவர் அவைகளைத் தொடுமுன்னே பசுக்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து அக்குடத்தினைப் பாலால் நிரப்பின. மண்ணால் சமைக்கப்பட்ட சிவலிங்கத் திற்கு அப்பாலைக் கொண்டு முழுக்காட்டினார். மகிழ்ந்தார். மேய்ச்சல் நிலத்தில் பசுக்கள் பாலைப் பொழிந்த போதிலும் அவற்றின் இல்லங்களிலும் காலையிலும் மாலையிலும் வழக்கத்திற்கு அதிக மாகவே பால் அளித்து வந்தன.

இவ்வாறு சண்டேசுரரின் வழிபாடு பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இந்நிலை அறியாத அறிவிலி ஒருவன் அவ்வூர் அந்தணர்களை

யடைந்து ''சண்டேசுரர் பாலைக் கறந்து மணலில் ஊற்றுகிறார்'' என்று கூற ஊர் அந்தணர்கள் ''அப் படியா?'' என்று வெகுண்டெழுந்தனர். சண்டேசுரரின் தந்தை எச்சதத்தனை ஊரார் முன் வரச் செய்தனர்.

''மேய்ப்பன் மடையன் என்று கூறி ஆனிரை மேய்க்கச் சென்ற உன் மகனின் செயல் நன்று நன்று. பசுவின் பாலை மணலில் ஊற்றுவது என்ன நியாயம்'' என வினவினர். இச்செய்தியைக் கேட்ட எச்சதத்தன் பதறினார். பொறுத்தருள வேண்டு மென்று ஊர் அந்தணர் முன் மன்னிப்பு கோரி வீடு திரும்பினார். மாலை வீடு திரும்பிய சண்டேசுரரி டம் இது பற்றி ஏதும் வினவினாரில்லை.

அடுத்த நாள்; ஆம் அடுத்த நாளே வழக்கம் போல் சண்டேசுரர் பசுக்களை மேய்ச்சல் நிலம் நோக் கிச் செலுத்திச் சென்றார். அவர் சென்ற பின் அவர் அறியாமல் எச்சதத்தனும் பின் தொடர்ந்து மண்ணி யாற்றங்கரை மேய்ச்சல் நிலம் அருகே குராமரம் ஒன் றிலேறி மகன் அறியாமல் மறைந்திருந்தார்.

நன்கு மேய்ந்திருந்த பசுக்கள் நண்பகலில் மண்ணியாற்றில் நீர் பருகி சண்டேசுரர் இருந்த இடத்திற்கு நிழல் நாடி வந்தன. சண்டேசுரர் ஆற்றில் நீராடி கை நிறைய மலர்களுடன் சிவலிங்கத்தை யடைந்து வழிபாட்டைத் தொடங்கினார். பசுக்கள் பொழிந்த பாலை குடத்தில் நிறைத்து சிவலிங்கத் திற்கு அருகில் வைத்துக்கொண்டார். மனதை ஒரு முகப்படுத்தி சிவ பூசையில் ஒன்றியிருந்தார். உலகப் பொருள்கள் ஏதும் அவர் கண்களில் படவில்லை. உண்மைப் பொருள் ஒன்றையே தம் முன் கண்டார். புறக்கண் மூடி நின்றார்.

மறைந்திருந்த எச்சதத்தன் இக்காட்சியைக் கண்டார். அந்தணர்களால் குறை கூறப்பட்டவராத லின் மகிழ்ச்சிக்கு மாறாக வெறுப்பும் சினமுமே அப்பொழுது அவரிடம் நிறைந்து நின்றன. மரத் தினின்றுனும் இறங்கி சண்டேசுரர் பூசை செய்து கொண்டிருந்த இடத்தை அணுகிக் கையில் இருந்த கோலால் சண்டேசுரரின் முதுகில் அடித்தார். அவரை வைதார். பூசைனையில் முற்றும் தம்மை மறந்த நிலையில் இருந்த சண்டேசுரர் இச் செய்கைகளை சிறிதும் அறிந்தாரில்லை. உடனிருந்த தனயனின் செயலைக் கண்ட எச்சதத்தனின் மனம் உண்மை யில் உருகியிருக்க வேண்டும் - சிவலோகப் பதவி கிடைக்க வேண்டிய நேரம் வந்து விட்டதே - ஆத லால் இச்செய்கை அவருடைய ஆத்திரத்தை மேலும் மிகச் செய்தது.

இறைவனை முழுக்காட்ட சண்டேசுரர் சேமித்து வைத்திருந்த பால் குடத்தை எச்சதத்தன் தன் கால்களால் இடறினார். தன்னுடைய பூசைக்கு ஏதோ இடையூறு நேர்ந்துவிட்டதே என்று சிறிதே கண் விழித்த சண்டேசுரர் அருகில் கிடந்த கோலை எடுத்தார். அதுவே மழுவாகிவிட்டது. இறைவன் அப்படிச் செய்துவிட்டான் போலும்.

இடறியகால் தன் தந்தையினுடையதென்று அறிந்தாரில்லை; மழுவினை வீசினார். சிவ அப ராதம் செய்த கால்கள் வெட்டுண்டு வீழ்ந்தன. அத னையும் அறியாமலே பூசையை மேலும் தொடர்ந்து நிறைவு செய்தார்.

என்ன ஆச்சரியம்! என்னே சண்டேசுரர் பெற்ற பேறு? உமையொரு பாகனாய் விடையூர்தி யில் எழுந்தருளி பேரொளியுடன் சண்டேசுரருக்கு இறைவன் காட்சி நல்கினான். கைகுவித்து விழுந்து வணங்கி புளகாங்கிதம் அடைந்தார் சண்டேசுரர். இறைவன் சண்டேசுரரை (அப்பாலகனை) எடுத்து அணைந்து உச்சிமோந்து மகிழ்ந்தார்.

''என்னையே எண்ணிய நீ உன் தந்தையை வீழ்த்திவிட்டாய். இப்பொழுது முதல் நாமே உனக் குத் தந்தை'' எனக் கூறியருளினார். இறைவனால் தழுவப் பெற்ற சண்டேசுரரைப் பேரின்ப ஒளியாகக் கண்ட அமரரும் அவரை வணங்கினர்.

''நீயே நம் தொண்டர்க்கெல்லாம் தலைவன். நாம் உண்பனவும் உடுத்துவனவும் இனி உனக்கே உரிமை'' என்று கூறிய இறைவன் தன் முடியின் மீதிருந்த கொன்றை மாலையை தம் திருக்கரத்தா லேயே எடுத்து சண்டேசுரருக்குச் சூட்டி ஆசீர் வதித்தார்.

''சண்டேசுரர் வாழ்க! சண்டேசுரர் வாழ்க என வானுலகும் மண்ணுலகும் வாழ்த்தின.

எச்சதத்தனுக்கும் இறைவன் சிவலோக பதவி யளித்தார். சண்டேசுரரும் அவருடைய உடம்புடன் சிவனாரின் செல்வரானர்.

இத்தகைய பெருமைகளுக்கெல்லாம் பாத்திர மான சண்டேசுரருக்கு தனி சந்நிதியும் தனியாகத் தேரும் அமைத்து வழிபாடு செய்வது மிகவும் பொருத்த மானதென்று உணர்வோமாக.

மேலும் கோவில் வலம் வந்து நிறைவு செய்யும் தருவாயில் சண்டேசுரர் சந்நிதியில் நின்று ஒன்றையும் நினையாமல் நடுவிரல் மேல் கட்டை விரலை வைத்து ஒலி எழுப்பு முன் சண்டேசுரரின் செயற்கரிய செயலையும் மனம் ஒன்றிய வழி பாட்டையும் அந்த ஒரு கண மேனும் நம் மனதுள் நிறுத்துவோமாக.

ஓம் சிவாய நம.

# சைவ வைணவ ஒற்றுமையும் சில அரிய குறிப்புகளும்

- திருமதி இந்திரா ஆராஅமுதன், திருவரங்கம்

பரதன் சித்ரகூடத்தில் இருந்த ராமனிடம் உம்முடைய பிரிவினால் மிகவும் துக்கப்பட்டு, உம்மையே நினைத்துக் கொண்டு உம்முடைய தகப்பனார் காலகதியானார் என்று கூறினான்.

இதைக் கேட்ட ராமன், ''எனக்காகப் பிராணனை இழந்து, என்னாலே சம்ஸ்காரமும் செய்யப்படாத உத்தமமான என் தகப்பனாருக்கு நான் ஒரு பிரயோஜனமும் இல்லாத பிள்ளையாகப் பிறந்து விட்டேன். என்னுடைய நல்ல நடத்தையைப் பார்த்து அம்ருதம் போன்ற இனிய சொற்களால் என்னை சந்தோஷப் படுத்திய என்னுடைய பிதாவின் இனிய மொழிகளை மறுபடி எப்போது நான் கேட்பேன்'' என்று வருத்தப் பட்டுக் கொண்டார்.

ராமனின் வருத்தத்தை அறிந்து கொண்ட தேவர்கள், தங்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் தானே பகவான் ராமாவதாரம் செய்தார் என்று நினைத்து அவருடைய வருத்தத்தைப் போக்கி, தங்கள் நன்றியையும் காட்டுவதற்கு ஏற்ற சந்தர்ப்பத்திற்கு காத்திருந்தனர்.

ராவண வதம் நடந்தபின், அவரவர் அவரவர் முறையில் ராமனுக்கு நன்றியைத் தெரிவித்தனர். அதன்படி பிரம்மா ''பகவான் நாராயணேதேவ:'' என்று ஆரம்பித்து ராமருடைய தத்துவத்தைக் காட்டிய துதியில் பகவானின் பரத்வத்தை நிர்ணயித்தார்.

தேவேந்திரன் யுத்தக்களத்தில் தேரோட்டியுடன் தேரைக் கொடுத்ததுமட்டுமின்றி, யமதர்மராஜன் யுத்தம் முடிந்தபின் இறந்த வானரங்களையும் பிழைக்க வைத்தான்.

அக்னிபகவான் பிராட்டியை ஏந்தி ஸ்ரீராமரிடம் சேர்த்தான்.

சங்கரபகவான்தான் மிகவும் உன்னதமான காரியம் செய்தார். ஸ்வர்க்கத்திலிருந்த தசரத சக்ரவர்த்தியை பூலோகத்தில் இருந்தமாதிரியே விமானத்தில் அழைத்து வந்து ஸ்ரீராமனுக்கு காட்டியதுடன் இருவருக்கும் சம்பாஷணை ஏற்படும்படியான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தினார்.

அன்னையின் தீக்குளிப்பு நடந்தபின் ஏற்பட்ட இந்த சம்பவம் ராமனின் மனக் குறையைத் தீர்த்தது. சீதையை ஏற்றுக் கொள்ளும்படி தசரதன் கூறியதும், பரதனை மகனாக ஏற்கும்படி ராமன் விண்ணப் பித்ததும் ஆகிய இந்த சந்தர்ப்பத்தை மகாதேவன் அருளினால் நான் பெற்றேன் என்று ''மகாதேவ ப்ரசாதம்'' என்று ராமர் சொன்னார்.


சங்கரனும் பார்வதிக்கு, ''ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமேமனோரமே! ஸஹஸ்ர நாம தத்துல்யம் ராமநாம வரானனே'' என்று உபதேசித்தார். இன்றைக்கும் காசி விசுவநாதர் ஆலயத்தில் சந்தனத்தினால் ராம நாமம் எழுதப்பட்ட வில்வ தளங்களை அர்ச்சிக்கிறதைப் பார்க்கலாம். அதே போல் திருவேங்கட மலையில் ஸ்ரீனிவாசப் பெருமாளுக்கு திருவாதிரை தோறும் வில்வ தளங்களால் அர்ச்சனை செய்யப்படுவதையும் நாம் காணலாம்.

**நவக்ரஹங்களின் மனைவி பெயர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன் | - | உஷா, ப்ரத்யுஷா |
| 2. | சந்திரன் | - | ரோஹிணி |
| 3. | செவ்வாய் | - | சக்திதேவி |
| 4. | புதன் | - | ஞானசக்திதேவி |
| 5. | வியாழன் | - | தாராதேவி |
| 6. | வெள்ளி | - | சுகீர்த்தி |
| 7. | சனி | - | நீலா |
| 8. | ராகு | - | ஸிம்ஹீ |
| 9. | கேது | - | சித்ரலேகா |

**தேவர்களின் மனைவி பெயர்**

| | | |
|---|---|---|
| இந்திரன் | - | சசி என்கிற இந்திராணி |
| அக்னி | - | ஸ்வாஹா தேவி |
| வாயு | - | அஞ்சனாதேவி |
| வருணன் | - | பர்ணாசை |
| யமன் | - | ஐயோ |



## நவக்ரஹ ஆதிக்கம் கொண்ட சிவஸ்தலங்கள் 9

| | | |
|---|---|---|
| 1. | சூரியனார் கோயில் | (ஞாயிறு) |
| 2. | திங்களூர் | (திங்கள்) |
| 3. | வைத்தீசுவரன் கோயில் | (செவ்வாய்) |
| 4. | திருவெண்காடு | (புதன்) |
| 5. | ஆலங்குடி | (வியாழன்) |
| 6. | கஞ்சனூர் | (வெள்ளி) |
| 7. | திருநள்ளாறு | (சனி) |
| 8. | திருநாகேஸ்வரம் | (ராகு) |
| 9. | கீழப்பெரும்பள்ளம் | (கேது) |

இதேபோன்று நவக்ரஹங்களுக்கு உரிய வைணவஸ்தலங்களை நவதிருப்பதி என்பர். பாண்டிய நாட்டு ஸ்தலங்கள் அவை

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன் | - | ஸ்ரீவைகுண்டம் |
| 2. | சந்திரன் | - | வரகுணமங்கை (நத்தம்) |
| 3. | செவ்வாய் | - | திருக்கோளூர் |
| 4. | புதன் | - | திருப்புளிங்குடி |
| 5. | வியாழன் | - | திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி) |
| 6. | சுக்ரன் | - | திருப்பேரை |
| 7. | சனி | - | திருக்குளந்தை (பெருங்குளம்) |
| 8. | ராகு | - | திருத்தொலை வில்லி மங்கலம். இரட்டைத் திருப்பதி |
| 9. | கேது | - | திருத்தொலை வில்லி மங்கலம். (இரட்டைத் திருப்பதி) |

வாரத்தில் நாட்கள் ஏழு என்பதும், சங்கீதத்தில் சுரங்கள் ஏழு என்பதும் நிறங்கள் ஏழு என்பதும் எல்லாரும் அறிந்தது. மற்றும் சிலவற்றைப் பார்ப்போம்

**1. மேல் உலகங்கள் 7:** (1) பூலோகம் (2) புவர்லோகம் (3) சுவர்லோகம் (4) மஹர்லோகம் (5) ஜனலோகம் (6) தபலோகம் (7) சத்யலோகம்.

**2. கீழ் உலகங்கள் 7:** (1) அதல் (2) விதல (3) சுதல (4) தலாதல (5) மகாதல (6) ரஸாதல் (7) பாதாளம்

**3. சிரஞ்ஜீவிகள் 7:** (1) பலி (2) வியாசர் (3) பரசுராமர் (4) கிருபர் (5) அஸ்வத்தாமா (6) ஹனுமான் (7) விபீஷணன்

**4. ரிஷிகள் 7:** (1) அத்ரி (2) ப்ருகு (3) குத்ய (4) வசிஷ்டர் (5) கௌதமர் (6) காச்யபர் (7) அங்கீரஸ

**5. மாதாக்கள் 7:** (1) அபிராமி (2) மகேஸ்வரி (3) கௌமாரி (4) நாராயணி (5) வாராகி (6) ருத்ராணி (7) காளி

**6. நதிகள் 7:** (1) கங்கை (2) யமுனை (3) சரஸ்வதி (4) கோதாவரி (5) நர்மதை (6) ஸிந்து (7) காவேரி

**7. முக்திஸ்தலங்கள் 7:** (1) அயோத்தி (2) ஹரித்வார் (3) காசி (4) மதுரா (5) உஜ்ஜயினி அல்லது அவந்தி (6) துவாரகா (7) காஞ்சி.

★★★

# எது சரியான விடை?

தொகுப்பு : அ. நிறைமதி

**வினா 1:**

சுந்தரமூர்த்தி நாயனார் இடக்கண் பார்வையைத் திரும்பப் பெற்ற திருத்தலம் இவற்றில் எது?

அ. திருமயிலை.

ஆ. திருவாரூர்

இ. திருவான்மியூர்

ஈ. திருக்கச்சி ஏகம்பம்

**வினா 2 :**

பன்னிரு சோதிர்லிங்கத் திருத்தலங்களில் தமிழகத்தில் உள்ளது இவற்றில் எது?

அ. திருப்பரங்குன்றம்

ஆ. திருக்கழுக்குன்றம்

இ. திருவண்ணாமலை

ஈ. இராமேஸ்வரம்

**வினா 3 :**

திருஞானசம்பந்தர் ஆண்பனையைப் பெண்பனையாக்கிய திருத்தலம் இவற்றில் எது?

அ. திருச்செந்தூர்

ஆ. திருப்பனையூர்

இ. திருப்பெண்ணாகடம்

ஈ. புறவார் பனங்காட்டூர்.

**வினா 4:**

நடராசர் ஆடல்புரியும் இரத்தினசபை அமைந்துள்ள திருத்தலம் இவற்றில் எது?

அ. மதுரை

ஆ. திருநெல்வேலி

இ. திருவாலங்காடு

ஈ. திருக்குற்றாலம்

**வினா 5 :**

கண்ணப்பர் கண்அப்பிய பெருமைமிக்க திருக்காளத்தி திருத்தலம் தற்பொழுது அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழகம்

ஆ. கர்நாடகம்

இ. கேரளம்

ஈ. ஆந்திர மாநிலம்

**வினா 6 :**

பட்டினத்தடிகள் சமாதி அமைந்துள்ள இடம் எது?

அ. திருவொற்றியூர்

ஆ. திருவெண்காடு

இ. திருவான்மியூர்

ஈ. திருவிடைமருதூர்

**வினா 7 :**

சிவபெருமான் திரிபுரம் எரித்த திருத்தலம் எது?

அ. அச்சிறுபாக்கம்

ஆ. திருக்கோவலூர்

இ. திருவதிகை

ஈ. திருக்குறுக்கை

**வினா 8 :**

திருஞானசம்பந்தர் சோதியுள் கலந்த திருநல்லூர் பெருமணம் எனும் திருத்தலத்தின் இன்றைய பெயர் என்ன?

அ. ஆண்டார் குப்பம்

ஆ. ஆவுடையார் கோயில்

இ. ஆச்சாள் புரம்

ஈ. வாளொளிப்புத்தூர்

வினா 9 :

திருஞானசம்பந்தர் திருமணம் செய்து கொண்ட பெண்ணின் பெயர் என்ன?

அ. பூம்பாவை

ஆ. மதங்கசூளாமணி

இ. தோத்திரபூரணாம்பிகை

ஈ. மங்களாம்பிகை

வினா 10 :

தாடகை என்ற பக்தைக்காக சிவபெருமான் திருமுடியைச் சாய்த்து மாலை ஏற்ற திருத்தலமான தாடகையீஸ்வரம் தேவாரத்தில் எவ்வாறு வழங்கப் படுகின்றது

அ. திருச்சாத்தமங்கை

ஆ. திருவுசாத்தானம்

இ. திருக்கோடி

ஈ. திருப்பனந்தாள்

வினா 11 :

இராமானுஜரின் திருமேனி வைக்கப்பட் டுள்ள திருக்கோயில் இவற்றில் எது?

அ. ஸ்ரீவைகுண்டம்

ஆ. திருக்குருகூர்

இ. திருவரங்கம்

ஈ. திருவேங்கடம்

வினா 12 :

திருவேங்கடமலையில் ஸ்ரீனிவாச பெருமாளுக்கு சங்குசக்கரங்கள் சாற்றிய பெருமை இவர்களில் யாருக்கு உரியது?

அ. திருமலை நம்பி

ஆ. திருக்கோட்டியூர் நம்பி

இ. தொண்டைமான்

ஈ. இராமாநுஜர்

வினா 13 :

இராமாநுஜராகப் பூவுலகில் அவதாரம் செய்தவர் இவர்களில் யார்?

அ. கருடாழ்வார்

ஆ. ஆஞ்சநேயர்

இ. சேனை முதலியார்

ஈ. ஆதிசேடன்

வினா 14 :

திருமண வரம் அளிப்பதும். திருமால் தினம் ஒரு கன்னியை மணப்பதுமாகவுள்ள திருத்தலம் இவற்றில் எது?

அ. திருவில்லிபுத்தூர்

ஆ. திருக்கண்ணமங்கை

இ. திருவிட வெந்தை

ஈ. திருக்கடல் மல்லை

வினா 15 :

''அணிஅரங்கன் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' எனப் பாடியவர் இவர்களில் யார்?

அ. தியாகராஜ சுவாமிகள்


ஆ. அன்னமாச்சாரியார்

இ. ஆண்டாள்


ஈ. திருப்பாணாழ்வார்.

## சரியான விடை

1. ஈ. திருக்கச்சி ஏகம்பம்
2. ஈ. இராமேஸ்வரம்
3. அ. திருஒத்தூர்
4. இ. திருவாலங்காடு
5. ஈ. ஆந்திர மாநிலம்
6. அ. திருவொற்றியூர்
7. இ. திருவதிகை
8. இ. ஆச்சான்புரம்
9. இ. தோத்திரபூரணாம்பிகை.
10. ஈ. திருப்பனந்தாள்
11. இ. திருவரங்கம்
12. ஈ. இராமாநுஜர்
13. ஈ. ஆதிசேடன்
14. இ. திருவிடவெந்தை
15. ஈ. திருப்பாணாழ்வார்



பதிவு எண். T.N/CHIEF PMG/515/2000/WPP 283



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.